பக்கங்கள்: 12
விலை:20 ரூபா
# காலைக்கதிர்
Kalaikkathir
விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | ஐப்பசி 01 | வியாழக்கிழமை 18.10.2018 | கதிர் 346

**இனி இது ரகசியம் அல்ல!**

'சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி' – என்ற கதையாகியிருக்கின்றது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைக் கொல்வதற்கு 'றோ' அமைப்புச் சதி என்ற அறிவிப்பு.

தாம் எத்தகையதோர் அமைச்சரவைக்குத் தலைமை தாங்குகின்றார் என்பதை பக்கம் 02

# என்னைக் கொல்ல 'றோ' சதி!

## ஜனாதிபதி பரபரப்புக் குற்றச்சாட்டு



*கொழும்பு, ஒக். 18*

*இந்தியப் புலனாய்வுப் பிரிவான 'றோ' தன்னைக் கொல்லச் சதித் திட்டம் தீட்டியுள்ளது என மைத்திரிபால சிறிசேன அமைச்சரவைக் கூட்டத்தில் அதிர்ச்சித் தகவலை வெளியிட்டுள்ளார்.*

*நேற்று முன்தினம் அமைச்சரவைக் கூட்டத்தில் பங்கேற்ற அமைச்சர் ஒருவரை ஆதாரம் காட்டி கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.*

பக்கம் 11

# கைதிகள் விடுதலை முறைமை அடுத்த வாரத்தில் முடிவாகும்

## கூட்டமைப்பிடம் ஜனாதிபதி தெரிவிப்பு

**கொழும்பு, ஒக்ரோபர் 18**

**பிரதமர், சட்டமா அதிபர், தேவையான அனைவரையும் அழைத்து அரசியல் கைதிகள் விடயத்தைச் சாதகமாக அணுகி, அவர்களது விடுதலையை எவ் விதமான முறையில் நிறைவேற்றலாம் என்பதை அடுத்த வாரம் முடிவு செய்வோம் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரிடம் தெரிவித்துள்ளார்.**

பக்கம் 11

## சி.வீ.கே. தலைமையில் நேற்று வெடுக்குநாறிமலைக்குக் குழு



வவுனியா, ஒக். 18

வவுனியா வடக்கு வெடுக்குநாறிமலைக்கு வடக்கு மாகாணசபை அவைத் தலைவா சி.வீ.கே.சிவஞானம் தலைமையில் 12 மாகாண சபை உறுப்பினாகள் குழு நேற்று நேரில் விஜயம் செய்து அங்குள்ள பக்கம் 11

## வனவளத் திணைக்கள அடாவடிகளை நேரில் ஆராய்ந்த வடக்கு அரசின் குழு



வவுனியா, ஒக். 18

வவுனியா வடக்கு மருதோடை கிராமசேவகர் பிரிவுக்குட்பட்ட காஞ்சுரமோட்டைமற்றும்நாவலர்பண்ணை உள்ளிட்ட பகுதிகளில் மக்களை மீள்குடியேற விடாது வனவளத்திணைக்களம் தடுத்து பக்கம் 02

## 'றோ' சதி செய்தியை மறுக்கும் ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு

கொழும்பு, ஒக். 18

தன்னை கொலைசெய்வதற்கு 'றோ' திட்டம் தீட்டுவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அமைச்சரவைக் கூட்டத்தில் கருத்து வெளியிட்டார் என ஊடகங்களில் வெளியான செய்திகளை ஜனாதிபதி ஊடகப் பிரிவு பக்கம் 11

## மைத்திரியை 'றோ' குறி வைக்கவில்லை

### அமைச்சர் ராஜித மறுப்பு

கொழும்பு, ஒக். 18

தம்மைக் கொலை செய்யும் சதித் திட்டத்துக்குப் பின்னால், இந்தியாவின் 'றோ' புலனாய்வுப் பிரிவு இருந்தது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒருபோதும் கூறவில்லை என்று அமைச்சரவைப் பக்கம் 02

## மைத்திரியை அவசரமாக சந்தித்தார் இந்தியத் தூதர்

### மோடியின் விசேட செய்தியும் கையளிப்பு



கொழும்பு, ஒக். 18

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், இலங்கைக்கான பக்கம் 11

## மைத்திரிபாலவுடன் மோடி தொலைபேசியில் பேச்சு!

### கொழும்பு – டில்லி உறவைக் காக்க உறுதி



கொழும்பு, ஒக். 18

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்குமிடையே நேற்று மாலை பக்கம் 11

## 'றோ'வின் சதி மோடிக்கு தெரியாமல் இருக்கலாம்!

### கூறினாராம் மைத்திரி

கொழும்பு, ஒக். 18

கைது செய்யப்பட்ட இந்தியர், என்னைக் கொல்ல முயற்சிக்கும் பக்கம் 11

# இதுவா உங்கள் நல்லாட்சி?

## வடக்கு மாகாண சபை உறுப்பினர்களிடம் நேரில் கேட்டனர் காஞ்சிரமோட்டை மக்கள்

வவுனியா, ஒக். 18

சொந்த நிலத்தில் நிம்மதியாக வாழ வழியில்லாமல் இரவு நேரங்களில் பெண்கள் ஒன்றாகவும், ஆண்கள் ஒன்றாகவும் உறங்கி, மழையிலும், வெயிலிலும் அவல வாழ்வை வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இதுவா உங்கள் நல்லாட்சி? இதுக்காகவா நல்லாட்சி அரசை உருவாக்கினோம்?

– இவ்வாறு கேள்வி எழுப்பினர் காஞ்சிரமோட்டை மக்கள்.

பக்கம் 02

# மீண்டும் பயங்கரவாதத்தை தூண்டும் செயலில் அரசு

## விமல் வீரவன்ஸ குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 18

பயங்கரவாதச் செயற்பாடுகளில் ஈடுபட்ட குடும்பத்தினருக்கு இழப்பீடு வழங்க அரசு மேற்கொண்டிருக்கும் நடவடிக்கையானது நாட்டில் மீண்டும் பயங்கரவாதத்தைத் தூண்டும் செயலாகும். ஆனால் இயற்கை அனர்த்தங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன்னும் அரசு நட்டஈடு வழங்காமல் இருக்கின்றது எனக் கூட்டு எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

கூட்டு எதிரணி நேற்றுக் கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தனது நாட்டுக்கு எதிராக ஆயுதப்போராட்டம் மேற்கொண்ட பயங்கரவாதிகளுக்கு நட்டஈடு வழங்கும் நாடு உலகில் எங்கும் இல்லை.

பயங்கரவாதச் செயற்பாடுகளில் ஈடுபட்டு நாட்டை பிளவுபடுத்த ஆயுதமேந்திப் போராடிய குடும்பங்களுக்கு நட்டஈடு வழங்க அரசு எடுத்திருக்கும் தீர்மானமானது பயங்கரவாதத்துக்கு துணைபோகும் செயலாகும்.

அரசியல் தலைவர்களைக் கொலை செய்த மற்றும் அரச நிறுவனங்கள், விகாரைகளுக்குக் குண்டுவைத்த புலி உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கின்றது – என்றார். (ஐ)

### இதுவா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட காஞ்சிரமோட்டை கிராம மக்கள் 28 வருடங்களின் பின்னர் தமது சொந்த நிலத்தில் மீள்குடியேறி வரும் நிலையில் வனவளத் திணைக்களம் அவர்களின் மீள்குடியேற்றத்தைத் தடுத்து வருகின்றது.

இந்த மக்களுடைய நிலைமைகளை நேரில் அவதானித்து அவற்றை உரிய தரப்பின் கவனத்திற்குக் கொண்டு செல்வதற்காக வடமாகாணசபை அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் தலைமையில் 12 மாகாணசபை உறுப்பினர்கள் நேற்றுக் காஞ்சிரமோட்டை கிராமத்திற்கு நேரடி விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

இதன்போதே மக்கள் மாகாணசபை உறுப்பினர்களிடம் கண்ணீர்மல்க இவ்வாறு கேள்வி எழுப்பினர்.

அவர்கள் மேலும் கூறுகையில்–

1983ஆம் ஆண்டு யுத்தம் ஆரம்பமான காலப்பகுதியில் காஞ்சிரமோட்டைக் கிராமத்தில் இருந்த 3 பேர் கடத்திச் செல்லப்பட்டனர்.

அவர்களின் நிலை இன்றளவும் தெரியாது. இந்நிலையில் தொடர்ந்தும் கிராமத்தில் இருக்க இயலாமல் 1983ஆம் ஆண்டு தொடக்கம் 1990ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் நாம் எமது கிராமத்தை விட்டு வெளியேறினோம். பின்னர் இந்தியாவிலும், வடமாகாணத்தின் பல்வேறு இடங்களிலும் இடம்பெயர்ந்து வாழ்ந்தோம்.

கடந்த 4 மாதங்களுக்கு முன்னர் சொந்த நிலத்தில் நாங்கள் மீள்குடியேறிய நிலையில் வனவளத் திணைக்களம் எமது மீள்குடியேற்றத்திற்குத் தொடர்ச்சியாக தடைகளை விதித்து வருகின்றது. குறிப்பாக மீள்குடியேற்றத்திற்கு வந்திருக்கும் 38 குடும்பங்களுக்கும் அரை நிரந்தர வீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

நிரந்தர வீடுகளை அமைப்பதற்கான நிதி கிடைத்துள்ள போதும் வனவளத் திணைக்களம் அந்த நிதி எமக்குக் கிடைக்காத வண்ணம் தடைகளை விதித்து வருகின்றது. இடம்பெயர்வுக்கு முன்னர் சுமார் 300 றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் இங்கே வாழ்ந்து வந்தோம். பலர் இப்போதும் தங்கள் சொந்த நிலத்திற்கு வருவதற்கு ஆசையாக உள்ளார்கள்.

ஆனாலும் அச்சம் காரணமாக அவர்கள் வரத் தயங்குகிறார்கள். நாம் எமது சொந்த நிலத்தில் விவசாயம் செய்து வீடுகளைக் கட்டி நின்மதியாக வாழவேண்டும். அதற்கு ஆவன செய்யவேண்டும். மீள்குடியேற்றத்திற்கு வந்து 4 மாதங்களாகும் நிலையில் வீதி சீரமைத்து தரப்படவில்லை. மின்சாரம் தரப்படவில்லை. கிணறு அமைக்க அனுமதிதரப்படவில்லை. இவ்வாறான நிலையில் எங்களுடைய பிள்ளைகள் சுமார் 5 கிலோ மீற்றா தூரம் நடந்து பாடசாலைகளுக்குச் சென்று வருகின்றார்கள். 3 கிலோ மீற்றா தூரம் நடந்து வைத்திய சாலைக்கு சென்று வருகின்றோம் – என்றனர். (ஐ-07)

### வனவளத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரும் நிலையில் அது குறித்து வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் குழு அந்தக் கிராமங்களுக்கு நேற்று நேரில் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டது.

அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம் தலைமையில் மாகாணசபை உறுப்பினர்கள் 12 பேர் கொண்ட குழு இந்தக் கிராமங்களுக்கு நேரில் சென்றது.

வவுனியா மாகாண சபையின் கடந்த 133 ஆவது அமர்வின் போது சபையின் வவுனியா மாவட்ட உறுப்பினர் ஜீ.ரீ.லிங்கநாதன், வவுனியா வனஇலாகாவினரின் அடாவடிகள் தொடர்பில் சுட்டிக்காட்டி, இந்த விடயத்தில் சபை விசேட கவனமெடுத்துக்கள விஜயமொன்றை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

இதற்கமைய மாகாண சபையின் உறுப்பினர்கள் அடங்கிய குழுவொன்று நேற்று அங்கு சென்று நிலைமைகளைப் பார்வையிட்டது.

இதன்போது அங்கு சகல காணிகளையும் வன இலாகாவினர் கையகப்படுத்தி வைத்திருக்க முயற்சிப்பதாலேயே மீள்குடியமர்வைதடுத்துவருகின்றனர் என்று அங்குள்ள மக்கள் குற்றஞ்சாட்டினர். அதேவேளை, தமது மீள்குடியமர்வை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கோரிக்கை விடுத்தனர்.

இந்த விடயங்கள் தொடர்பாக ஜனாதிபதி மற்றும் பிரதமரின் கவனத்திற்கு உடனடியாகக் கொண்டு வந்து தம்மாலான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகத் தெரிவித்த அவைத் தலைவர் சிவஞானம், இந்தியத் தூது வருக்கும் இங்குள்ள நிலைமைகள் தொடர்பில் தெரியப்படுத்த உள்ளார் எனவும் குறிப்பிட்டார்.

சபையின் 38 உறுப்பினர்களில் 12 பேர் மட்டுமே நேற்று இந்தப் பயணத்தில் இணைந்து கொண்டனர். (ஐ-07)

# 12 இலட்சம் ரூபா பெறுமதியான 28,000 வீடுகள் வடக்கு - கிழக்கில்

கொழும்பு, ஒக். 18

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இடம்பெயர்ந்தவர்களுக்காக வீடுகளை வழங்கும் திட்டத்தின் கீழ் 65 ஆயிரம் வீடுகளை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதன் முதல் கட்டமாக 28 ஆயிரம் வீடுகளை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கலந்துரையாடல் இணக்கப்பாட்டுக் குழுவில் சிபாரிசுக்கு அமைவாக ஒரு வீட்டு அலகுக்கு 12 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாவுக்கு வழங்குவதற்கு அமைவாக என்.டி. என்ரபிரைசஸ், யக்கா டெவலப்பர்ஸ் மற்றும் ஆச்டியம் லிமிட்டட் என்ற நிறுவனக் குழுமத்துக்கு வழங்குவதற்காக வடக்கு அபிவிருத்தி, இந்து மத அலுவல்கள் அமைச்சர் டிஎம். சுவாமிநாதன் சமர்ப்பித்த ஆவணத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ஐ)

# அனந்தியின் கட்சி ஆரம்ப நிகழ்வுக்காக மண்டபம் வழங்க மாநகர சபை மறுப்பு

யாழ்ப்பாணம், ஒக். 18

யாழ். மாநகரசபையின் ஆளுகையின் கீழ் யாழ்.பொது நூலகம் உள்ள நிலையில், அரசியல் நிகழ்வுகளுக்குப் பொதுநூலக மண்டபத்தை ஒதுக்கி தரமுடியாதிருப்பதாக யாழ்.மாநகர ஆணையாளர் அறிவித்துள்ளார்.

வடக்கு மாகாண அமைச்சர் அனந்தியின் ஈழத் தமிழர் சுயாட்சிக் கழக ஆரம்பநிகழ்வை அங்கு நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிலையிலேயே ஆணையாளர் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

இந்த நிகழ்வை இன்று வியாழக்கிழமை யாழ்.பொதுநூலகக் கேட்போர் கூடத்தில் நடத்த அனந்தி இடமொதுக்கித் தருமாறு கோரியிருந்தார்.

ஆயினும் அரசியல் நிகழ்வுகளுக்கு மண்டபத்தை ஒதுக்கி தரமுடியாதிருப்பதாக யாழ். மாநகர ஆணையாளர் எழுத்து மூலம் அறிவித்துள்ளார். (ஐ)

### மைத்திரியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சாளரான ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடந்த அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அமைச்சர் ராஜித சேனாரத்ன இதனைத் தெரிவித்தார்.

தன்னைக் கொலை செய்யும் சதித் திட்டத்தில் றோவுக்குத் தொடர்பு உள்ளதாக ஜனாதிபதி கூறினார் என ஊடகங்களில் வெளியான செய்திகளையும் அமைச்சர் ராஜித சேனாரத்ன நிராகரித்தார்.

படுகொலைச் சதித் திட்டக் குற்றச்சாட்டுடன் 'றோ' தொடர்புபடுத்தப்பட்டுள்ளது என்றுதான் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அப்போது ஊடகச் சந்திப்பில் பங்கேற்றிருந்த இந்தியப் பெண் ஊடகவியலாளர், சதித் திட்டத்தில் றோவுக்கு தொடர்பு இருப்பதாக ஜனாதிபதி குற்றம்சாட்டினார் என்று அமைச்சரவைக் கூட்டத்தில் பங்கேற்ற அமைச்சர்கள் சிலர் தன்னிடம் கூறினர் என்று தெரிவித்தார்.

எனினும், அதற்குப் பதிலளித்த அமைச்சர் ராஜித சேனாரத்ன, 'றோ' மீது ஜனாதிபதி குற்றம் சாட்டவில்லை என்றும், ஆனால், ஏனையவர்கள் என்ன கூறினார்கள் என்பதைத்தான் குறிப்பிட்டார் என்றும் கூறினார். (ஐ)

### இனி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உணராமலேயே அங்கு தேவையில்லாமல் வாயைக் கொடுத்து, சீறிப் பாய்ந்து, இப்போது வாங்கிக் கட்டிக் கொண்டிருக்கின்றார் அவர்.

இந்தச் சர்ச்சையில், மைத்திரியை மாட்டிவிட்டதே மஹிந்த தரப்புத்தான் என்கின்றன உள் வீட்டு வட்டாரங்கள்.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் எஸ்.பி. திஸநாயக்கா வீட்டில் ராஜபக்ஷாக்களை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சந்தித்தார் அல்லவா? அப்போது அங்கு கொடுக்கப்பட்ட ஒரு கயிறை விழுங்கிவிட்டுத்தான் இப்படி அமைச்சரவைக் கூட்டத்தில் வந்து கக்கியிருக்கின்றார்கள் மைத்திரி.

அந்தச் சந்திப்பின்போது பிரதமர் ரணிலுடன் இனிமேலும் என்னால் சேர்ந்து வேலை செய்ய முடியாது என்று ரணிலைக் கரித்துக் கொட்டினார் மைத்திரி.

அதுதான் சந்தர்ப்பம் என்று பார்த்து கோட்டாபய கயிறைக் கொடுத்திருக்கின்றார்.

*"பாருங்கள் என்னையும் உங்களையும் கொல்வதற்கு ரணிலின் ஆள் நடவடிக்கை எடுத்திருக்கின்றார். அது குறித்து ரணில் தலைமையிலான அமைச்சர்கள் துரித நடவடிக்கையும் எடுக்க வில்லை; குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்த முயற்சிக்கவுமில்லை. இதற்கு பின்னால் இந்தியக் கையும் இருக்கின்றது போலும். இந்தியர் ஒருவரும் சந்தேக வலைக்குள் சிக்கியிருக்கின்றார்."* – என்று போட்டுக் கொடுத்தாராம் கோட்டா.

அதைத்தான் விழுங்கி விட்டு வந்து, அமைச்சரவையில் கொட்டியிருக்கின்றார் மைத்திரி. அதை செவிமடுத்த ஐ.தே.கட்சியைச் சேர்ந்த சில அமைச்சர்களுக்கு சந்தோஷமோ சந்தோஷம். அவர்கள் முதல் செய்த காரியம் என்ன தெரியுமா? அமைச்சரவைக் கூட்டம் முடிந்த கையோடு கொழும்பில் உள்ள 'தி ஹிந்து' செய்தியாளரான பெண்மணியைத் தொடர்பு கொண்டு விடயத்தை ஒப்பித்தமை. ஒன்றல்ல, இரண்டல்ல, ஐந்து அமைச்சர்கள் மைத்திரி இந்தக் கருத்தை வெளியிட்டமையை அந்தச் செய்தியாளருக்கு உறுதிப்படுத்தினர்.

*'அப்படி ஐந்து அமைச்சர்கள் இத்தகவலை உறுதிப்படுத்தியுள்ளார்கள். ஆகவே செய்தி முற்றிலும் சரி. ஆனால், நாளைக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதைக் கட்டாயம் மறுப்பார். தாம் அமைச்சரவையில் கூறிய கருத்தை பகிரங்கமாக வெளியில் கூறும் திராணி அவருக்கு இல்லை. ஆகவே இந்த செய்தியை பிரசுரிக்கின்றமை குறித்து நீங்களே தீர்மானியுங்கள்'* – என்ற அடிக்குறிப்புடனேயே 'தி ஹிந்து' கொழும்புச் செய்தியாளர் விடயத்தைத் தமது ஆசிரியருக்கு அனுப்பி வைத்தார்.

ஆசிரியரும் அந்தச் செய்தியை முக்கியத்துவம் கொடுத்து பிரசுரிக்க, கொழும்புச் செய்தியாளர் குறிப்பிட்டபடி உடனடியாகவே – நேற்று – அந்த விடயத்தில் 'பல்டி' அடித்து அறிவிப்பை வெளியிடச் செய்ய வேண்டியவரானார் மைத்திரிபால.

அவரை இந்தியாவுடன் தொடர்ந்து இழுபறியில் மாட்டி வைக்கும் முயற்சியைக் கூட்டு எதிரணி நேற்றும் தொடர்ந்தது.

நேற்று மாலை பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனை குழுக் கூட்டம் நடைபெற்றதல்லவா? அதில் பங்குபற்றிய கூட்டு எதிரணியின் விமல் வீரவன்ஸ எம்.பி. கூட்டத்தில் ஜனாதிபதியை இந்தியாவுக்கு எதிராக ஏமாற்றிபவர் போலக் கருத்து வெளியிட்டார்.

மைத்திரி, கோட்டாபயவை கொல்ல முற்சி எடுக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள இந்தியர் 'றோ'வின் ஆள்தான் என்று அடித்துக் கூறினார் விமல். அந்த நபரின் பெயர் மற்றும் சில விவரங்களையும் விமல் வீரவன்ஸ அங்கு வெளியிட்டார் எனத் தெரிகின்றது.

இந்தச் சந்தேக நபர் விமல் வீரவன்ஸவின் வீட்டுக்குச் சென்று விமல் வீரவன்ஸவின் மனைவியையும் சந்தித்து உரையாடியுள்ளார் என்ற செய்திகள் வெளியாகியுள்ளன. இந்தப் பின்னணியிலேயே இந்தத்தகவலை நேற்று பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனைக்கூட்டத்தில் விமல் வீரவன்ஸ வெளியிட்டிருக்கின்றார்.

நேற்று மாலை ஜனாதிபதி மைத்திரி சிறிசேனவுடன் இவ்விடயம் குறித்து தொலைபேசியில் பேசிய இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இவ்விவகாரத்தில் இலங்கை ஜனாதிபதியின் செயற்பாடு சம்பந்தமாகதமது அதிருப்தியை வெளியிட்டார் என்றும் கூறப்படுகின்றது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அண்மைக்கால கருத்து வெளிப்பாடுகள், அவரின் பதவிக்குரிய அரசியல் முதிர்ச்சியில் அவர் இல்லை என்பதையே காட்டுகின்றன என்றார் தமிழ் அரசியல் விமர்சகர் ஒருவர் எனக்கு அப்படித்தான் தோன்றுகின்றது.

உங்களுக்கு....?

– மின்னல் –

# யாழ்.போதனா வைத்தியசாலைக்குள் பள்ளிவாசல் நிறுவ அனுமதியில்லை

## தொழுகைக் கூடமே ஏற்பாடு என்கிறார் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், ஒக். 18

**யாழ். போதனா வைத்தியசாலை வளாகத்தில் பள்ளிவாசல் அமைக்க அனுமதியளிக்கப்பட்டுள் ளது என்று வெளியாகிய தகவல் தொடர்பில் வைத்தி யசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி மறுப்புத் தெரிவித்துள்ளார்.**



யாழ். போதனா வைத்திய சாலையில் பிரத்தியேகமாக அறை ஒன்று ஒதுக்கப்பட்டு இஸ் லாமியர்கள் தொழுகை செய்வதற் கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனினும் வைத்தியசாலை வளா கத்துக்குள் பள்ளிவாசல் ஒன்றை புதிதாக அமைப்பதற்கு எந்தவொரு அனுமதியும் வழங்கப்படவில்லை என்று அவர் குறிப்பிட்டார்.

யாழ். போதனா வைத்திய சாலை வளாகத்துக்குள் பள்ளி வாசல் ஒன்றைப் புதிதாக அமைப் பதற்கு பல்வேறு மட்டங்களி லிருந்து கோரிக்கை முன்வைக்கப் பட்டது. இது தொடர்பில் சுகாதாரத் துறை பிரதி அமைச்சர் பைசல் ஹாசிம், யாழ். போதனா வைத்தி யசாலைப் பணிப்பாளரிடம் தொடர்புகொண்டு பேசியிருந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் ஊழியர்களால் வழி படுவதற்காக அமைக்கப்பட் டுள்ள சிறு ஆலயத்தை அகற்று வதற்காக கல்முனை நீதிமன் றத்தில் வழக்கு ஒன்றை கல்முனை மாநகர சபை முதல்வர் தாக்கல் செய்துள்ளார். இது தமிழ் மக்க ளிடம் கடும் அதிர்வை ஏற்படுத்தி யுள்ளது.

இந்தக் கட்டடம் கல்முனை மாநகரசபைக்குட்பட்ட எல்லைக் குள் அமைக்கப்பட்ட சட்டவிரோத மான கட்டடம் எனக் குறிப்பிட்டே இந்தச் சிறு ஆலயத்தை அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இந்தநிலையில் யாழ். போதனா வைத்தியசாலைக்குள் பள்ளி வாசல் அமைக்கும் பேச்சுக்கள் உயர் மட்டத்தில் முன்னெடுக்கப் பட வைத்தியசாலைக்குள்ளேயே எதிர்ப்புக்கள் எழுந்தன.

யாழ். போதனா வைத்திய சாலைக்கு முன்பாக பள்ளிவாசல் உள்ள நிலையில் வளாகத்துக்குள் மற்றொரு பள்ளிவாசல் அவசியம் தானா? விகாரை அமைப்பதற்கும் அனுமதியளிக்கப்படுமா? என்று வைத்தியசாலை நிர்வாகத்துக்குக் கடும் அழுத்தங்கள் வழங்கப்பட் டன.

அத்துடன், பள்ளிவாசல் அமைப்பதற்கு அனுமதியளிக்கப் படுமாகவிருந்தால் வைத்திய சாலை நிர்வாகத்துக்கு எதிராகப் போராட்டம் நடத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தியைத் தொடர்புகொண்டு கேட்டபோது– யாழ். போதனா வைத்தியசாலை வளாகத்துக்குள் பள்ளி வாசல் அமைப்பதற்கு எந்தவொரு அனுமதியும் வழங்கப்படவில்லை. இஸ்லாமிய சகோதரர்கள் தொழுகை செய்வதற்குப் பிரத்தி யேக அறை ஒன்று ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், எல்லா மதத்தவர் களும் தமது சமய அனுஷ்டா னங்களை முன்னெடுக்கப் பொது வான அறை ஒன்று ஒதுக்கப்படு வதற்கு ஏற்பாடுகள் முன்னெடுக் கப்படுகின்றன. வைத்தியசாலை வளாகத்துக்குள் ஆரம்பம் முதலே இந்து மற்றும் கிறிஸ்தவ ஆலயங் கள் உள்ளன. அவை தவிர்ந்த எந்தவொரு மதத்தலமும் அமைப் பதற்கு வைத்தியசாலைக் கட்ட அமைவிட வரைவில் இடம் ஒதுக் கப்படவில்லை.

எனவே உண்மைக்கு மாறான மற்றும் இன, மதங்களை வேறுபடுத் தல் தொடர்பில் வெளியாகும் தக வல்களை முற்றாக நிராகரிக் கின்றேன்–என்றார். (ஐ)

# கல்வியல் கல்லூரி மாணவர்கள் வைரஸ் காய்ச்சலால் பாதிப்பு!

## 10 பேர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதி

யாழ்ப்பாணம், ஒக். 18

யாழ்ப்பாணம், கோப்பாய் கல்வியல் கல்லூரியில் பயிலும் ஆசிரிய மாணவர்கள், வைரஸ் காய்ச்சலுக்கு உள்ளாகி வைத்தி யசாலையில் அனுமதிக்கப்பட்டுள் ளனர்.

இவ்வாறு திடீரென பரவிய வைரஸ் காய்சல் காரணமாக அனுமதிக்கப்பட்ட 10 ஆசிரிய மாணவர்களுக்கும் தொடர்ச்சி யாக சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்நிலையில் இந்த வைரஸ் காய்ச்சல் தொடர்பாகச் சுகாதார அதிகாரிகள் அவதானம் செலுத்தி வருவதாகக் கூறப்படுகின்றது.

மேலும் காய்ச்சல், வாந்தி, கடுமையான தலைவலி காணப் படுமாயின், உடனடியாக வைத்தி யசாலைக்குச் சென்று சிகிச்சை பெற்றுக்கொள்ளுமாறு பொதுமக் களுக்கு அறிவுறுத்தல் வழங் கப்பட்டுள்ளது. (ஐ)

# பூச்சாடியில் கஞ்சா வளர்த்தவர் கைது!

## உல்லாச விடுதி முற்றுகை

கொழும்பு, ஒக். 18

உல்லாச விடுதியில், பூச்சாடி யில் கஞ்சாச் செடி வளர்த்து வந்த நபரை ஹற்றன் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

ஹற்றன் பொலிஸ்பிரிவிற்குட் பட்ட காசல்ரி சவுத் வனராஜா பகுதியிலுள்ள உல்லாச விடுதியை நேற்றுச் சுற்றிவளைத்துத் தேடுதல் வேட்டையில் இறங்கிய பொலிஸார், ஒருதொகைக் கஞ்சா செடிகளை யும் மீட்டுள்ளனர்.

விடுதிக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு விற்பனை செய்ய மேற்படி கஞ்சா செடி வளர்க்கப்பட்டி ருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர். இது தொடர்பில் மேலதிக விசாரணை முன்னெடுக் கப்பட்டு வருகின்றது. (ஐ)

# போராட்ட வடிவம் மாறுகிறது கொடும்பாவி எரித்து எதிர்ப்பு



கொழும்பு, ஒக். 18

ஆயிரம் ரூபா சம்பள உயர்வை உடனடியாக வழங்கு மாறு பெருந் தோட்டக் கம்பனி களை வலியுறுத்தி ஹற்றன், லெதண்டி தோட்டத் தொழிலாளர்கள் நேற்று வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கம்பனிகளின் பாரபட்சமான செயற்பாடுகளுக்கு எதிர்ப்பை வெளியிடும் வகையில் கொடும் பாவியும் எரிக்கப்பட்டது.

ஹற்றன் – நோட்டன் பிரதான வீதியை மறைத்து நேற்றுக் காலை 10 மணியளவில் லெதண்டி தோட்டச் சந்தியில் ஆர்ப்பாட் டத்தை அவர்கள் முன்னெடுத்தனர்.

200 இற்கும் மேற்பட்ட தொழி லாளர்கள் கலந்துகொண்ட இந்த ஆர்ப்பாட்டத்தின் போது, தோட்டத் துரைக்கு 50 இலட்சம் ரூபாவுக்கு சொகுசு வண்டியை வழங்கும் தோட்டக் கம்பனிகள், தோட்டத் தொழிலாளிக்கு ஊதியம் வழங்கத் தயங்குவது ஏன் என்று கோஷ மெழுப்பினர்.

முதலாளிமார் சம்மேளனத் திக்கு எதிராகக் கொடும்பாவியை நடு வீதியில் எரித்ததுடன் சமை யல் பாத்திரங்களை வீதியில் உடைத்தும் ஆர்பாட்டம் செய்தனர்.

ஆர்ப்பாட்டத்தினால் இரண்டு மணித்தியாலங்கள் வரை போக்கு வரத்துத் தடைப்பட்டதுடன், ஹற்றன் பொலிஸாரின் தலையீட்டின் பின் ஆர்பாட்டம் நிறைவடைந்தது. (ஐ)

## தோட்டத் தொழிலாளர்கள் சம்பளம்

# மூன்று அமைச்சர்களுடன் ஜனாதிபதி நாளை பேச்சு!

கொழும்பு, ஒக். 18

தோட்டத் தொழிலாலர்களின் சம்பள உயர்வு தொடர்பில் நிதி யமைச்சர், தொழில் அமைச்சர், பெருந்தோட்டத்துறை அமைச்சர் ஆகியோருடன் கலந்தாலோசித்து விரைவான தீர்மானம் ஒன்றை பெற்றுக் கொடுப்பதாக ஜனாதி பதி உறுதியளித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் தமிழ் முற்போக் குக் கூட்டணி உயர் பீட உறுப் பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று நேற்று முன்தி னம் காலை ஜனாதிபதி செயலகத் தில் இடம்பெற்றுள்ளது.

கூட்டணியின் தலைவரும் அமைச்சருமான மனோகணேசன், பிரதித்தலைவரும் அமைச்சரு மான பழனி திகாம்பரம், பிரதித் தலைவரும் கல்வி ராஜாங்க அமைச்சருமான வீ.ராதாகிருஷ் ணன், நாடாளுமன்ற உறுப்பினர் கள் எம்.திலகராஜ், வேலுகுமார், அரவிந்தகுமார், மாகாண சபை உறுப்பினர்களான சோ.சிறிதரன், சரஸ்வதி சிவகுரு, சிங்.பொன் னையா, ஆர்.ராஜாராம், கே.டி.குரு சாமி, எம்.உதயகுமார், எம்.ராம் உள்ளிட்ட கூட்டணியின் உயர்பீட உறுப்பினர்கள் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

தோட்டத் தொழிலாளர்கள் சம்பளப் பிரச்சினை உக்கிரம டைந்துவரும் நிலையில் தமிழ் முற்போக்குக் கூட்டணியினர் இந்தப் பிரச்சினை தொடர்பாக ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டுவரும் முகமாகவே இந்தச் சந்திப்பு அவசரமாக இடம் பெற்றுள்ளதாக கூட்டணி வட்டாரங் கள் தெரிவித்தன.

தோட்டத் தொழிலாளர்கள் தொடர்ந்தும் ஆயிரம் ரூபா அடிப் படை சம்பளமாக நாளாந்தம் தங்களுக்கு வழங்கப்படல் வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து வீதியில் இறங்கிப் போராடத் தொடங்கியுள்ளனர்.

அவர்கள் தமது கோரிக்கை தொடர்பில் நாட்டின் தலைவர் என்ற வகையில் ஜனாதிபதியும் பிரதமரும் தலையிட்டு உரிய தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்து வருகின்றனர்.

எனவே அந்த மக்களின் பிரதி நிதிகள் என்றவகையில் அதனை ஜனாதிபதியின் கவனத்திற்கு நேரடியாகக் கொண்டு வரும் பொருட்டே ஜனாதிபதியைச் சந்தி த்தாகவும் தெரிவித்துள்ளனர்.

தமிழ் முற்போக்குக் கூட்டணி யின் கோரிக்கையைச் செவி மடுத்த ஜனாதிபதி, தோட்டத் தொழி லாளர்களின் கோரிக்கை நியாய மானது எனத் தான் உணர்வதாக வும் நாளை நிதியமைச்சர், தொழில் அமைச்சர், பெருந்தோட்டத்துறை அமைச்சர் ஆகியோருடன் கலந்தா லோசித்து விரைவான தீர்மானம் ஒன்றைப் பெற்றுக் கொடுப்பதா கவும் உறுதியளித்தார் எனவும் தெரிவித்துள்ளனர்.

மலையக மக்களுக்காக நல் லாட்சி அரசு இதுவரை முன்னெ டுத்த பல்வேறு வேலைத்திட்டங் களுக்கும் தமிழ் முற்போக்குக் கூட்டணி நன்றி தெரிவித்ததோடு எதிர்வரும் காலத்திலும் நல்லாட்சி அரசுக்குத் தமது ஆதரவு கிடைக் கும் என்ற உறுதிப்பாட்டையும் வழங் கியதாகவும் தெரியவருகிறது.

சம்பளப் பிரச்சினைக்கு மேலதி கமாக எதிர்வரும் காலங்களில் அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் ஜனாதிபதியின் அபிவிருத்தி திட் டங்களில் இருந்து அதிக நிதி ஒதுக் கீடுகளை எதிர்பார்ப்பதாகவும் தமிழ் முற்போக்குக் கூட்டணி தரப் பில் வேண்டுகோள் முன்வைக்கப் பட்டதாகவும் கூட்டணி வட்டாரங்கள் தகவல்.

# சம்பள உயர்வு வழங்கக் கோரி கொதித்தெழுகிறது மலையகம்

கொழும்பு, ஒக். 18

லிந்துலை – எல்ஜீன், லிப்ப கலை, தங்ககலை, மெராயா ஆகிய தோட்டங்களைச் சேர்ந்த தோட்ட தொழிலாளர்கள் 1000 ரூபா சம்பளத்தைப் பெற்றுத் தரக் கோரி ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்துள்ளனர்.

இந்த ஆர்ப்பாட்டம் நேற்று மதியம் மெராயா – தலவாக்கலை பிரதான வீதியில் மெராயா நக ரத்தில் பிரதான வீதியை மறித்து முன்னெடுக்கப்பட்டது. இதனால் இவ்வீதியினூடான போக்குவரத்து சில மணி நேரம் ஸ்தம்பிதமடைந் திருந்தது.

எதிர்ப்பு கோஷங்களை எழுப் பியதோடு, பதாதைகளையும் ஏந்தி நகரத்தில் பேரணியாகச் சென்ற தோடு, தொழிலாளர்களுக் காக மெராயா நகரத்தில் அனைத்து வியாபார நிலையங்களும் மூடப் பட்டு ஆதரவு தெரிவிக்கப் பட்டது.

'கம்பனிகாரர்களுக்குக் கொண் டாட்டம்; தொழிலாளர்களுக்குத் திண் டாட்டம்' என கோஷத்தை எழுப்பிய வாறு, பெருந்தோட்ட தொழிலாளர் களின் கூட்டு ஒப்பந்த விடயத்தில் தாங்கள் ஏமாற்றப்பட்டு வருவதா கவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, தோட்டத் தொழி லாளர்களின் சம்பளப் பிரச்சினைக்கு முடிவு கிடைக்காவிட்டால் எதிர் வரும் நாள்களில் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட உள்ள தாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் மேலும் சுட்டிக் காட்டினர். (ஐ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600


## நீடிக்கும் இழுபறி

**தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் நேற்றுத் தமிழ்க் கூட்டமைப்பு நடத்திய பேச்சுகளும் உடனடிப் பலனைப் பெற்றுத் தரவில்லை என்றே தோன்றுகின்றது.**

**இப்போது விவகாரம் இன்னும் ஒரு வாரத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டிருக்கின்றது. அவ்வளவுதான்.**

**ஜவ்வு மிட்டாய் – சுவிங்கம் – மாதிரி, விடயத்தை இழுத்தடித்துக் கொண்டிருக்கிறார்களே தவிர, இப்பிரச்சினைக்குத் தீர்க்கமான ஒரு முடிவு எட்டப்படுவதான கருத்து நிலைப்பாடு வெளிப்படுவதாகவேயில்லை.**

**அடுத்த வாரத்திலும் அரசியல் கைதிகளை விடுவிப்பதான முடிவு அறிவிக்கப்படும் என நம்புவதற்கு இல்லை. அவர்களை விடுவிப்பதற்கான முறைமை குறித்து ஆராய்வதற்கான கூட்டமே அடுத்த வாரத்தில் கூட்டப்படப் போகின்றது எனக் கூறப்படுகின்றது.**

**ஆனாலும், நேற்று நடைபெற்ற கூட்டம் தொடர்பில் கூட்டமைப்புத் தரப்பு வெளியிட்ட அறிக்கையும், அங்கு ஜனாதிபதி தாமே தெரிவித்தவை எனக் கூறப்படும் விடயங்கள் தொடர்பாகக் கிடைக்கும் தகவல்களும் இரண்டு அம்சங்களை நமக்கு உணர்த்தி நிற்கின்றன.**

**ஒன்று – இந்தக் கைதிகளின் விடுதலை தொடர்பான முறைமை குறித்து – அல்லது மார்க்கம் பற்றி – ஆராய்வதற்காகவே அடுத்த கூட்டம் அடுத்த வாரத்தில் கூட்டப்படுகின்றது என்ற தகவல் வெளிப்படுத்தப்பட்டமை, இந்த அரசியல் கைதிகளை ஏதோ ஒரு கட்டத்தில் விடுவித்தாக வேண்டும், அவர்களைக் காலம் காலமாக சிறையில் அடைத்து வைத்துத் தொடர்ந்தும் தொல்லைப்படுத்த முடியாது என்ற முடிவுக்கு அரசுத் தலைமை வந்து விட்டது என்பதையே காட்டுகின்றது.**

**மற்றது – ஆனாலும் இந்தக் கைதிகள் தொடர்பான அரசியல் தீர்மானம் ஒன்றைத் தனித்து மேற்கொண்டு, அதனை ஏதோ ஒரு வகையில் நடைமுறைப்படுத்தச் செய்யும் அரசியல் உறுதி நிலையில் ஜனாதிபதி இல்லை என்பது.**

**அதாவது, தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பது என்ற இணக்கத்துக்கு வந்துள்ள அரசுத் தலைமை, அதனை எப்படி, எப்போது, எந்த வழிமுறையில் முன்னெடுப்பது என்று தீர்மானிக்க முடியாது இருக்கின்றது என்பது தான் நிலைமை.**

**அத்தகைய தீர்மானத்தை எடுத்து நடைமுறைப்படுத்தும் போது, அதனால் தெற்கில் அரசியல் ரீதியாகத் தனக்கு வரக்கூடிய நெருக்கடிகளைச் சமாளிப்பதற்கு பிரதமர், சட்டமா அதிபர், நீதி அமைச்சர் என்று பல தரப்புகளையும் தனது தீர்மானத்தில் பங்காளிகளாக்கிப் பொறுப்பேற்கச் செய்ய எதிர்பார்க்கின்றார் போலும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.**

**இந்தக் கைதிகள் விவகாரப் பேச்சுகளில் ஒவ்வொரு தடவையும் ‘கல்லைக் கண்டால் நாயைக் காணோம், நாயைக் கண்டால் கல்லைக் காணோம்’ என்ற நிலைமை நீடிப்பதும் கூட இவ்விடயம் இழுபறிப்படுவதற்கான காரணமாகும்.**

**தமிழ் அரசியல் கைதிகள் உண்ணாவிரதம் இருக்கின்றார்கள், அவர்களுக்குப் பதில் கூறுங்கள் என்று பிரதமரிடம் போனால், அவர் *“சட்டமா அதிபர் வெளிநாட்டில். அவர் வந்ததும் பார்த்துக் கொள்ளலாம்”* என்றோ, அல்லது *“நீதி அமைச்சர் நாட்டில் இல்லை. அவர் வந்ததும் கூடிப் பேசித் தீர்மானிக்கலாம்”* என்றோ பதில் சொல்லும் நிலைமை நீடிக்கின்றது.**

**இப்போது கூட, கடந்த வாரம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சம்பந்தனும், சுமந்திரனும் கண்டு நேரடியாகச் சந்தித்து, நேற்றைய கலந்துரையாடலுக்குத் திகதி குறித்த போதே “அச்சமயத்தில் பிரதமர் நாட்டில் இருக்க மாட்டார். அவர் நாடு திரும்பியதும் கலந்துபேசி முடிவெடுப்போம் என்று பதில் வரக்கூடும், ஆகவே பிரதமருடனும் முற்கூட்டியே நேரடியாக இது குறித்துப் பேசி அவரின் கருத்தையும் பெற்றுக் கொண்டு இந்தச் சந்திப்புக்குப் போவதே சிறந்தது” என்று இப்பத்தியில் முற்கூட்டியே நாம் கூறியிருந்தோம். நாம் கூறியபடியே விவகாரம் நடந்திருக்கின்றது.**

**இப்போது தடுப்புக் காவலில் இருக்கும் இந்தத் தமிழ் அரசியல் கைதிகள் சுமார் 10 வருடங்கள் தொடக்கம் 26 வருடங்கள் வரை இவ்வாறு வாடுகின்றனர். இவ்வளவு காலம் இருக்கும் அவர்களை நல்ல முடிவுக்காக – தீர்வுக்காக – இன்னும ஒரு வாரம் வரை பொறுத்திருக்குமாறு கோர லாம். ஆனால் அப்போதும் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு இல்லாமல்அதைஇழுபடவிடக்கூடாது.**

**இது விடயத்தில் ஓர் அரசியல் தீர்மானம் எடுக்கப்பட வேண்டும். ஜனாதிபதி, பிரதமர், நீதி அமைச்சர், சட்டமா அதிபர் என சம்பந்தப்பட்ட தரப்புகள் எல்லாவற்றையும் ஒரு மேசைக்குக் கொண்டு வந்தால்தான் இது விடயத்தில் ஒரு தீர்வைக் காணலாம். அப்படி எல்லாத் தரப்புக்களையும் அடுத்த கூட்டத்துக்கு சமுகமளிக்க வைப்பது கூட்டமைப்பின் கெட்டித்தனத்தில் உள்ளது.**

# கல்விச் செல்வத்தை வாரி வழங்குகின்ற சரஸ்வதியைப் பூசிக்கும் தினம் இன்று



நவராத்திரி விழாவின் இறுதி நாளான மகா நவமி இன்று. கல்விக்கு அதிபதியான சரஸ்வதியின் ஆட்சிக்காலம். இந்தநாளில், நோன்பிருந்து, நைவேத்யங்களைப் படைத்து, கலைக்கு ஆதாரமாகத் திகழும் கலைமகளை பாடி ஆடி, பரவசமுடன் வணங்குவோருக்கு, கேட்ட வரத்தை அவள் தருவாள்.

நாளை, அன்னையை ப்ராஹ்மி ஆக, சித்திதாத்ரியை வழிபட வேண்டும். வில், அம்பு, அங்குசம், சூலம் முதலியவற்றை தரித்த கோலத்தில், அம்பிகையைபூஜிக்கவேண்டும்.

கல்விச்செல்வம் பெற அன்னையின் அருள் அவசியமாகும். எட்டு சித்திகளையும் உள்ளடக்கியவர், சித்திதாத்ரி என, கூறப்படுகிறது. தாமரை மீது வசிக்கும் இவளை, சாதுக்கள், யோகிகள், சித்தர்கள் வணங்குகின்றனர். சிவன் இவளை வழிபாடு செய்து, அனைத்து சித்திகளையும் பெற்று, அர்த்தநாரீஸ்வரர் ஆனார் என்பது புராணம்.

அக்காலத்தில் போர் செய்வது அதிகமாக இருந்தபடியால் வாள், வேல் முதலியவற்றையும் பூஜிப்பர்.

நாளை, தொழிற்சாலைகளில் உள்ள பெரிய இயந்திரங்களையும், வாகனங்களையும், அலங்கரித்து வழிபாடு நடத்துவது வழக்கம். இந்த எளிய விழாவின் நோக்கம், வேலையை வழிபடு என்ற கோட்பாட்டை வலியுறுத்துவதாகும். ஒன்பதாம் நாள் நவராத்திரி வழிபாடு படிக்கும் புத்தகங்களை அடுக்கி, பேனா, பென்சில் போன்ற எழுதும் உபகரணங்களையும் அடுக்கி, அதன் மீது, சரஸ்வதி தேவியின் உருவப் படத்தையோ, விக்கிரகத்தையோ வைத்து பூஜிப்பது வழக்கம். வீட்டிலுள்ள சுவாமி படங்கள், பெட்டிகள், கதவு நிலைகள், ஜன்னல்கள் எல்லாவற்றிற்கும், சந்தனம் குங்குமம் இடுவது வழக்கம்.

கொலு வைக்கும் வழக்கம் இல்லாதவர்கள் கூட, சரஸ்வதிபூஜைஅவசியம்செய்யவேண்டும். வண்டி வாகனங்களைத் துடைத்து, பொட்டு வைத்து, பூமாலை போட வேண்டும். அலுவலகங்களில் கூட, ஆயுத பூஜை நடத்துவர். அனைத்து கலைகளுக்கும் அதிபதி என்பதால், நம் கலை சார்ந்த பொருள்களையும் வைத்து, பூஜை செய்யலாம். பச்சைக் கற்பூரம் கொண்டு, ஆயுத கோலம் போடுவது சிறப்பு. மல்லிகை, பிச்சி, துளசி, தாமரை மலர்களால் ஆன மாலையை, அம்மனுக்கு சூட்டி வணங்குவது வழக்கம். பாசிப்பயறு சுண்டல், கல்கண்டு சாதம், அக்கார வடிசல் போன்ற நிவேதனங்களோடு, உளுந்து வடை, பாயசம், பச்சடி, கறி வகைகள் என, விருந்தாக சமைப்பது வழக்கம். இரு வேளையும் விளக்கேற்றி, சஹஸ்ரநாமம் சொல்லி, அம்பிகையைப் பூஜிக்கலாம்.

சண்டிதேவியை ஆத்மார்த்தமாக ஆராதித்து, பூஜையை முடித்த பின், பூசணிக்காய் குங்குமம் கலந்து வாசலில் உடைக்க வேண்டும். பிறர் பார்வையின் மூலம் நம்மை தாக்கும் பொறாமை போன்ற திருஷ்டிகள், இந்த பூசணிக்காயை சிதறி தெறித்து போவது போல், சிதறி விடும். உடைந்த பூசணிக்காயை, சிறிது நேரத்தில், சாலையில் இருந்து அப்புறப்படுத்தி விடுவது நல்லது.

நம் மனித சமுதாயம் தொழில், புலமை என்ற இரண்டே பிரிவுகளில் தான் இயங்குகிறது. ஞானத்தின் தெய்வமான சரஸ்வதியைப் பூஜிப்பது சரஸ்வதி பூஜை. நம் மன இருட்டை நீக்கி, தெளிவு என்கிற வெளிச்சத்தை, நம் வாழ்வில் ஏற்றுவாள். அறிவுடையார் எல்லாம் தனக்குரியார் என்பதற்கேற்ப, அறிவை பெற, சரஸ்வதியின் வழிபாடு அவசியம்.

# மன்னார் மனிதப் புதைகுழி குறித்து முழுமையான ஆய்வின் பின் தகவல்

## சட்ட வைத்திய அதிகாரி தெரிவிப்பு



மன்னார் மனித புதைகுழி தொடர்பில் முழுமையான ஆய்வின் பின்னர் துல்லியமான தகவல்களை வழங்குவோம் எனச் சட்ட வைத்திய அதிகாரி சமிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

மன்னார் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணி நேற்றுப் புதன்கிழமை 89ஆவது நாளாகவும் இடம்பெற்றது.

இதன்போது ஊடகவியலாளர்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாங்கள் தற்போது முழுமையாக அகழ்வுப் பணியையே மேற்கொள்கின்றோம். எனவே யாராக இருந்தாலும் மன்னார் புதைகுழி தொடர்பான உண்மை நிலையை அறியாது எந்தவித கருத்துக்களையும் தெரிவிக்கவேண்டாம். என்னுடன் இணைந்த குழுவினர் முழுமையான ஆய்வின் பின்னர் துல்லியமான தகவல்களை வழங்குவோம். எனவே அது வரை பிழையான கருத்துக்கள், விவாதங்களைத் தவிர்க்கவேண்டும்.

கடந்த வாரம் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் பத்ம உதய சாந்த குணசேகர மன்னார் மனிதப் புதைகுழியில் கண்டுபிடிக்கப்படும் மனித எலும்புக்கூடுகள் அனைத்தும் விடுதலைப் புலிகளின் காலத்தில் கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்ட சிங்கள மக்களின் எச்சங்களாகவும் இருக்கலாம் எனத் தெரிவித்துள்ளார்.

புலம்பெயர்ந்த தமிழர் அமைப்புக்கள் இந்த மனித எலும்புக்கூடுகள் இராணுவத்தினரால் கொன்று புதைக்கப்பட்ட தமிழர்களினுடையவை என ஐக்கிய நாடுகள் சபைக்குக் காண்பிக்கின்றனர். மனிதப் புதைகுழி தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ள இலங்கையிலேயே தடயவியல்நிபுணர்கள்இருக்கின்றனர்.

ஆனாலும் திட்டமிட்ட வகையில் இந்தப் புதைகுழி தொடர்பான மாறுபட்ட எண்ணக்கருவை தோற்றுவிப்பதற்காக இந்தியாவிலிருந்து தடயவியல் நிபுணர்களை அழைத்து வருவதற்கு மன்னார் நீதிமன்றில் அனுமதி கோரப்பட்டுள்ளது – என்றார். (ஐ)

# கொழும்பு – தலைமன்னார் ரயில் அடுத்த வாரம் முதல் சேவையில்

கொழும்பு, ஒக். 18

கொழும்பில் இருந்து தலைமன்னார் வரை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ள ரயில் சேவை அடுத்த மாதம் முதல் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என ரயில்வே திணைக்களப் பொது முகாமையாளர் நிலந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இந்தப் பாதையில் 3 புதிய பாலங்கள் பொருத்தப்படுவதால் ரயில் சேவைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன.

கடந்த ஓகஸ்ட் மாதம் 17ஆம் திகதி முதல் மதவாச்சியில் இருந்து தலைமன்னார் வரை ரயில் சேவை இடைநிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நாளை

19.10.2018
வெள்ளிக்கிழமை
நட்சத்திரம்: அவிட்டம் பி.ப. 4.03 வரை
திதி : தசமி மா. 5.56 வரை
சுபநேரம் : 6.02 – 7.32 வரை
இராகுகாலம் : 10.32 – 12.02 வரை

# பாதுகாப்பு ஆலோசனைக் குழு 4 ஆண்டுகளின் பின்னர் கூடியது



பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பிலான அமைச்சரவை ஆலோசனைக் குழு கூட்டம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று இடம்பெற்றுள்ளது. நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தக் கூட்டம் நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

பாதுகாப்பு அமைச்சின் செயற்பாடுகளில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பில் இதன்போது ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டமையுடன், அமைச்சுடன் தொடர்பிலான விடயங்கள் குறித்தும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் ஆர்.சம்பந்தன், அமைச்சர் மஹிந்த சமரசிங்க, தயாசிறி ஜயசேகர, திலங்க சுமதிபால, கூட்டு எதிரணியின் விமல் வீரவன்ஸ, வாசுதேவ நாணயக்கார, மஹிந்த யாப்பா அபேவர்தன, ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த மயந்த திசாநாயக்க, ரஞ்சன் ராமநாயக்க, எஸ்.எம்.மரிக்கார் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் உள்ளிட்டவர்கள் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர். (ஐ)

# பொருளாதார நெருக்கடியை சமாளிக்க மைத்திரி வியூகம்

## ஒரு வாரத்துக்குள் அறிக்கை சமர்ப்பிக்கப் பணிப்பு

கொழும்பு, ஒக்ரோபர் 18

உலக சந்தையில் ஏற்பட்டுள்ள நிச்சயமற்ற நிலை காரணமாகத் தற்போது இலங்கை எதிர்நோக்கியுள்ள பொருளாதாரச் சவால்களுக்கு தீர்வாக இறக்குமதியைக் கட்டுப்படுத்தக்கூடிய பொருள்கள் குறித்து கண்டறிந்து ஒரு வாரத்திற்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு நிதியமைச்சுக்கு, ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

ஜனாதிபதியின் தலைமையில் நேற்று முன்தினம் முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் தேசிய பொருளாதாரச் சபை கூடியபோதே இந்த பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

சர்வதேசச் சந்தையில் டொலரின் பெறுமதி அதிகரித்ததன் காரணமாக ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சவால்களை எதிர்நோக்குவதற்காக இலங்கை மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டது.

அத்தியாவசியமற்ற பொருள்களின் இறக்குமதியைத் தற்காலிகமாக மட்டுப்படுத்தி உள்நாட்டிலேயே அவற்றின் உற்பத்தியை ஊக்கப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தொடர்பாக தேசிய பொருளாதாரச் சபையில் விசேடமாகக் கவனம் செலுத்தப்பட்டது.

தற்போது இலங்கையில் இறக்குமதி செய்யும் பொருள்களில் அத்தியாவசியப் பொருள்கள் அல்லாத பொருள்கள் தொடர்பில் விதிக்கப்பட்டுள்ள எல்லைகளை இறுக்கப்படுத்தி, சுற்றாடல் ரீதியிலும் தேசிய கைத்தொழிலுக்கும் தாக்கம் செலுத்தும் பொலித்தீன் இறக்குமதியைக் கட்டுப்படுத்துவது தொடர்பாகவும் கவனம்செலுத்தப்பட்டது.

அத்தியாவசியப் பொருள்கள் அல்லாத பொருள்களின் இறக்குமதியை கட்டுப்படுத்துவதன் மூலமும் இறக்குமதிப் பொருள்களுக்கு உரியவாறு சுங்க வரியை அறவிடுவதன் ஊடாகவும் நாட்டின் விற்பனை மீதியின் பற்றாக்குறையை நிவர்த்திக்க முடியும் என ஜனாதிபதி தேசிய பொருளாதார சபையில் தெரிவித்தார்.

உள்நாட்டு வர்த்தகர்களும் உற்பத்தியாளர்களும் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் தொடர்பாகவும் தேசிய பொருளாதாரச் சபை கவனம் செலுத்தியது. சீனி இறக்குமதியாளர்கள் தற்போது எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டதுடன், தற்போதைய கட்டுப்பாட்டு விலைக்குச் சீனியை வழங்குவதால் அதிகளவு நட்டம் ஏற்படுவதாகவும் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது.

அமைச்சர்கள் மங்கள சமரவீர, ராஜித சேனாரத்ன, கலாநிதி சரத் அமுனுகம, துமிந்த திசாநாயக்க, மஹிந்த அமரவீர, மஹிந்த சமரசிங்ஹ, மலிக் சமரவிக்ரம உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகளும் ஜனாதிபதியின் செயலாளர் உதய ஆர்.செனவிரத்ன, தேசிய பொருளாதார சபையின் பொதுச் செயலாளர் பேராசிரியர் லலித் சமரகோன், நிதியமைச்சின் செயலாளர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க, இலங்கை மத்திய வங்கியின் சிரேஷ்ட பிரதி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்ஹ உள்ளிட்ட அதிகாரிகளும் இந்த சந்திப்பில் பங்குபற்றினர்.

# மத்தளவில் தரையிறங்கியது மற்றொரு பெரிய விமானம்!



கொழும்பு, ஒக். 18

உலகில் இரண்டாவது மிக பெரிய பொருட்கள் விநியோக விமானமான ஏ.என். 124 விமானம் நேற்றுப் பகல் 12.20 மணியளவில் மத்தள விமான நிலையத்தில் தரையிறங்கியது.

19 பேருடன் சவூதி அரேபியாவின் பிறின்ஸ் சுல்தான் விமான நிலையத்திலிருந்து, இந்தோனேசியா வரை பயணித்த இந்த விமானம் எரிபொருள் நிரப்புவதற்காகவும் அலுவலகர்களின் ஓய்வுக்காகவும் மத்தள விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டது.

இந்த விமானம் இன்று அதிகாலை 3.30 மணியளவில் இந்தோனேசியா நோக்கி மீண்டும் பயணத்தை ஆரம்பிக்கவுள்ளது.

# 302 தேசியப் பாடசாலைகளுக்கு விரைவில் அதிபர்கள் நியமனம்

கொழும்பு, ஒக். 18

நாட்டில் உள்ள 302 தேசிய பாடசாலைகளில் நிலவும் அதிபர்களுக்கான வெற்றிடத்தை நிரப்புவதற்கு, கல்வி அமைச்சு நடவடிக்கைமேற்கொண்டுள்ளது.

இதற்கான நேர்முக பரீட்சை நேற்று முன் தினம் முதல் நவம்பர் மாதம் 10 ஆம் திகதி வரை இடம் பெறவுள்ளதாகக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த காலங்களில், ஆரம்பம் முதல் உரிய முறையில் வெற்றிடங்களுக்கு என நேர் முகப் பரீட்சை நடத்தப்படாமையால் தேசியப் பாடசாலை பல வற்றில் தகுதி உடைய வெற்றி டங்கள் ஏற்பட்டிருந்தன. சில அதிபர்கள், நீண்ட காலமாக ஒரே பாடசாலையில் பணியாற்றியுள்ளமை தெரியவந்துள்ளது.

இதற்கமைவாகவே, தேசியப் பாடசாலைகளில் நிர்வாகம் மற்றும் முகாமைத்துவத்தை முறையாக முன்னெடுக்கும் பொருட்டு, தகுதி பெற்ற தர அதிபர்களை, பதவித் தர அடிப்படையில் நியமிப்பதன் தேவை அடையாளம் காணப்பட்டுள்ளது.

302 பாடசாலைகளில் நிலவும் அதிபர் வெற்றிடங்களைப் பூரணப்படுத்துவதற்கும், எட்டு வருட காலத்துக்கும் மேலாக ஒரே பாடசாலையில் பணியாற்றும் அதிபர்களை, ஏனைய பாடசாலைகளுக்கு இடமாற்றவும் அரச சேவைஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன், கல்வி அமைச்சு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

# 3ஆம் கட்ட சமரை கண்டியில் ஆரம்பிக்கின்றார் மஹிந்தர்!

## 03 ஆம் திகதி முதல் ஆட்டம் ஆரம்பம்

கொழும்பு, ஒக். 18

தேசிய அரசுக்கு எதிராக அடுத்த மாதம் 03 ஆம் திகதி முதல் தொடர் போராட்டங்களை நடத்துவதற்கு கூட்டுஎதிரணி நேற்றுத் தீர்மானித்துள்ளது.

இதன்படி முதலாவது போராட்டம் 03 ஆம் திகதி கண்டியிலும், இரண்டாவது போராட்டம் 06 ஆம் திகதி அநுராதபுரத்திலும் நடைபெற்ற பின்னர், மாவட்ட ரீதியில் அடுத்த கட்டப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படும்.

கூட்டு எதிரணியின் முக்கியத்துவமிக்க சந்திப்பொன்று நேற்று முன் தினம் இரவு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் கொழும்பில் இடம்பெற்றது.

மாகாணசபைத் தேர்தல், பொருளாதார நெருக்கடி, இடைக்கால அரசமைக்கும் யோசனை உட்பட மேலும் பல விடயங்கள் சம்பந்தமாக இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

குறிப்பாக மாகாணசபைத் தேர்தலை உடனடியாக நடத்துமாறு வலியுறுத்தியும், ஐ.தே.க. தலைமையிலான அரசின் பொருளாதாரக் கொள்கைகளுக்கு எதிராகவும் நாடு தழுவிய ரீதியில் போராட்டம் நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2019 ஆம் நிதியாண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தை முன்வைப்பதற்கு அரசு தயாராகிவரும் நிலையிலேயே, மஹிந்த அணியும் அரசுக்கு எதிரான ஆட்டத்தை ஆரம்பிக்கவுள்ளது.

பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவந்து ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு மஹிந்த அணி வகுத்த வியூகம் இறுதிநேரத்தில் முறியடிக்கப்பட்டது.

அதன் பின்னரும் பல வழிகளிலும் ஆட்சியைக் கவிழ்க்க கூட்டு எதிரணி முற்பட்டாலும் அவை கைகூடவில்லை. இந்நிலையிலேயே அரசுக்கு எதிரான மூன்றாம்கட்ட சமரை மஹிந்த கண்டியில் ஆரம்பிக்கவுள்ளார்.

## மைத்திரி, கோட்டா கொலைச் சதி:

# நாலக்கவைப் பணியிலிருந்து இடைநிறுத்துமாறு பரிந்துரை

கொழும்பு, ஒக். 18

பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பொறுப்பதிகாரி பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக்க டி சில்வாவை, பணியிலிருந்து இடைநிறுத்துமாறு சட்டம் மற்றும் ஒழுங்குகள் அமைச்சு, தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கு பரிந்துரை செய்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோரைக் கொலை செய்வதற்கு சதித்திட்டம் தீட்டினார் என நாலக்க டி சில்வா மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



## அரசியல் நெருக்கடிக்கு மத்தியில்
# சவுதி மன்னருடன் நேரில் அமெ. அமைச்சர் பேச்சு!

**■ பத்திரிகையாளர் ஜமால் மாயமான சர்ச்சை நீடிப்பு**

ரியாத்,ஒக்.16

சவுதிமன்னர்சல்மானைஅமெரிக்க வெளியுறவு மந்திரி மைக் பாம்பியோ சந்தித்தார். அப்போது இரு தலைவர்களும் பத்திரிகையாளர் ஜமால் கசோக்கி மாயமானது பற்றி விரிவாக விவாதித்தனர்.

சவுதி மன்னர் சல்மானின் முடியாட்சியை பற்றி கடுமையாக விமர்சித்து வந்தவர், அந்த நாட்டின் பத்திரிகையாளர் ஜமால் கசோக்கி (வயது 59).

இந்த நிலையில் அவர் சமீபத்தில் துருக்கி நாட்டுக்கு சென்றார். அங்கு இஸ்தான்புல் நகரில் உள்ள சவுதி அரேபிய துணை தூதரகத்துக்கு கடந்த 2 ஆம் திகதி சென்ற அவர், பின்னர் மாயமானார்.

அவர் அந்தத் தூதரகத்துக்குள் வைத்து சவுதி அரேபிய முகவர்களால் கொல்லப்பட்டு விட்டார் என்று பலதரப்பிலும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

ஆனால் இந்தக் குற்றச்சாட்டை இதுவரை சவுதி அரேபியா மறுத்து வருகிறது. இது ஆதாரமற்றது, தவறானது என அந்த நாடு திட்டவட்டமாகக் கூறுகிறது.

பத்திரிகையாளர் ஜமால் கசோக்கி சவுதி அரேபியாவால் கொலை செய்யப்பட்டிருந்தால், அந்த நாட்டின் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் எச்சரித்தார்.

அதைத் தொடர்ந்து பத்திரிகையாளர் ஜமால் கசோக்கி மாயமானமை தொடர்பாக மன்னர் சல்மான் விசாரணைக்கு உத்தர விட்டுள்ளார். இதற்கிடையே சவுதி அரேபிய அதிகாரிகளின் அனுமதி பெற்று, துருக்கி பொலிஸ் அதிகாரிகள் இஸ்தான்புல் துணைத் தூதரகத்துக்குச் சென்று விசாரணை நடத்தினார்கள்.

இதற்கிடையே அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப், சவுதி அரேபிய மன்னர் சல்மானை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார். அதைத் தொடர்ந்து டுவிட்டரில் ஒரு பதிவு வெளியிட்டார்.

அந்தப் பதிவில் அவர், “ சவுதி மன்னரை தொடர்பு கொண்டு பேசினேன். அவர், எங்கள் சவுதி அரேபிய குடிமகனுக்கு என்ன நேர்ந்தது என்பது பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்கிறார். அவர் இந்தப் பிரச்சினையில் விடை காண்பதற்கு துருக்கியுடன் இணைந்து செயல்பட்டு வருகிறார் எனத் தெரிவித்தார். மன்னரை சந்தித்துப் பேசுவதற்காக வெளியுறவு மந்திரியை அங்கு (சவுதி அரேபியா) உடனே அனுப்புகிறேன்” என்று குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி அவர் வெளியுறவு மந்திரி மைக் பாம்பியோவை சவுதி அரேபியா அனுப்பினார்.

நேற்று முன்தினம் ரியாத் போய்ச்சேர்ந்தமைக் பாம்பியோ, சவுதி மன்னர் சல்மானை சந்தித்துப் பேசினார். பத்திரிகையாளர் ஜமால் கசோக்கி மாயமானமை பற்றி இருவரும் விரிவாக ஆலோசனை நடத்தினர்.

பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மானையும் மைக் பாம்பியோ சந்தித்து விட்டு துருக்கி நாட்டுக்கு விரைகிறார்.

இதற்கு மத்தியில் பத்திரிகையாளர் ஜமால் கசோக்கி விவகாரத்தில் நடந்தது என்ன என்பது பற்றி சவுதி அரேபியாவும், துருக்கியும் தெரிவிக்க வேண்டும் என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர் மிச்செல் லிபசேலெட் வலியுறுத்தி உள்ளார்.

## இரண்டு மணி நேரம் செயலிழந்த 'யூ டியூப்'

கலிபோர்னியா,ஒக்.17

உலகளவில் முடங்கிய யூ-டியூப் இணையத்தள சேவை மீண்டும் செயல்பட தொடங்கியுள்ளது. 'சர்வர்' கோளாறு காரணமாக யூ- டியூப் இணையத் தளம் நேற்று முன்தினம் முடங்கியிருந்தது. பழுதைச் சரி செய்யும் பணியில் உயர்நுட்ப வல்லுனர் குழுவினர் தீவிரமாக ஈடுபட்டனர். இதனையடுத்து சுமார் 2 மணி நேரத்திற்கு பின் யூ- டியூப் இணையத்தள சேவை தளம் சீராகி மீண்டும் செயல்பட தொடங்கியுள்ளது. அமெரிக்காவில் உள்ள கலிபோர்னியா மாகாணத்தில் இருந்து செயல்படும் யூ-டியூப் இணையத்தளம் உலக அளவில் வீடியோ பதிவுகளை பகிர்ந்து கொள்ள உதவுகிறது.

இந்த இணையத்தளத்தை சான் மாடியோ என்பவர் 2005இல் உருவாக்கினார். 2006 ஆம் ஆண்டில் இதை கூகுள் நிறுவனம் கையப்படுத்தியது.

## இஸ்ரேல் தலைநகராக ஜெருசலேமை அங்கீகரிக்க ஆஸ்திரேலியாவும் தயார்!

**■ அந்நாட்டுப் பிரதமர் அறிவிப்பு**



கான்பெர்ரா, ஒக்.18

அமெரிக்காவைப் பின்பற்றி ஆஸ்திரேலியாவும் இஸ்ரேல் தலைநகரமாக ஜெருசலேமை அங்கீகரிக்க இருப்பதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

கிறிஸ்தவர்கள், யூதர்கள், இஸ்லாமியர்கள் என மூன்று மதத்தினருக்கும் புனித நகரமாக திகழக்கூடிய ஜெருசலேம் நகரை இஸ்ரேலின் தலைநகராக அங்கீகரித்து கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் அறிவிப்பு வெளியிட்டார்.

உலகளாவிய எதிர்ப்புக்கு இது வழிவகுத்தது. ஆனாலும், அடுத்த கட்டமாக கடந்த மே மாதம், ஜெருசலேம் நகரில் அமெரிக்க தூதரகம் திறக்கப்பட்டது.

இந்த நிலையில் அமெரிக்காவை பின்பற்றி ஆஸ்திரேலியாவும் இஸ்ரேல் தலைநகராக ஜெருசலேமை அங்கீகரிக்கவும், தனது தூதரகத்தை ஜெருசலேம் நகருக்கு மாற்றவும் பரிசீலித்து வருகிறது. இதை ஆஸ்திரேலிய பிரதமர் ஸ்காட் மோரீசன் அறிவித்தார்.

மேலும், ஈரான் அணு ஆயுத தவிர்ப்பு ஒப்பந்தத்துக்கு அளித்து வருகிற ஆதரவை மறுபரிசீலனை செய்யவும் ஆஸ்திரேலியா முடிவு செய்துள்ளது. இதையும் பிரதமர் ஸ்காட் மோரீசன் கூறி உள்ளார்.

ஈரான் அணு ஆயுத தவிர்ப்பு ஒப்பந்தத்தில் ஆஸ்திரேலியா ஒருதரப்பினராககையெழுத்திடாத போதும், இப்போது தனது ஆதரவை வாபஸ் பெற்றால் அது அமெரிக்க ஜனாதிபதி டிரம்புக்கு சாதகமாக அமையும் என்பது குறிப்பிடத்தக்கது. அமெரிக்கா, மேற்கத்திய நாடுகளின் ஆதரவை இதில் எதிர்பார்க்கிறது என்பது குறிப்பிடத்தக்கது

# ரஷ்யக் கல்லூரியில் குண்டுத் தாக்குதல்

## 18 பேர் பலி; 50 பேர்வரையில் காயம்



ரஷ்யா நாட்டின் கிரிமியாவில் உள்ள கல்லூரியில் நேற்று நிகழ்ந்த குண்டு வெடிப்பில் 18 பேர் உயிரிழந்தனர் என முதல் கட்ட தகவல் தெரிவிக்கப் பட்டுள்ளது. 1991ஆம் ஆண்டு சோவியத் யூனியன் உடைந்த பிறகு, சுமார் 13 ஆண்டுகளுக்குப் பிறகு கடந்த 2014ஆம் ஆண்டு உக்ரைன் நாட்டின் கிரிமியா பகுதியை ரஷ்யா தன்னுடன் இணைத்துக் கொண்டது.

உக்ரைன் விவகாரத்தில் கிரிமியா பகுதி மக்கள் அவர்களின் விருப்பத்தின் பேரிலேயே தங்கள் நாட்டுடன் இணைந்தனர் என ரஷ்யா தரப்பில் தெரிவிக்கப் பட்டாலும், இவ்விவகாரத்தில் சர்வதேச நாடுகளின் எதிர்ப்பு அதிகமாகவே இருந்து வருகிறது.

இந்நிலையில், கிரிமியாவில் கிழக்கு பகுதியான கெர்ச் நகரில் உள்ள தொழில்நுட்பக் கல்லூரியில் நேற்று நடந்த தாக்குதலில் 18 பேர் உயிரிழந்தனர் எனவும், 50 பேர் காயமடைந்தனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். உயிரிழந்தனர்களில் பெரும்பாலானோர் மாணவர்கள் என்றும் வெடிகுண்டுத் தாக்குதல் மற்றும் துப்பாக்கிசூட்டு தாக்குதலில் 18 பேர் உயிரிழந்துள்ளதாக முதல் கட்டமாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

# ஏமன் உள்நாட்டு யுத்தத்தினால் அந்நாட்டில் பட்டினி, பஞ்சம்

**■ 3 லட்சம் பேர் நேரடியாகப் பாதிப்பு என்கிறது ஐ.நா.**

ஏமனில் தொடரும் மோதல்களால் லட்சக்கணக்கான மக்கள் பஞ்சத்தை நோக்கி தள்ளப்படக் கூடும் என்று ஐ.நா., சபை அச்சம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து ஐக்கிய நாடுகள் சபை தரப்பில், ஏமனில் நடக்கும் உள் நாட்டுப் போர் காரணமாக கடினமான பொருளாதார நெருக்கடி நிலவுகிறது. இந்த நிலைமை இவ்வாறே தொடர்ந்தால் இன்னும் 3 லட்சம் பேர் பஞ்சத்திற்கு தள்ளப்படும் நிலைமை உண்டாகும். இதனை தடுப்பதற்கு வழக்கமான உணவுகள் அளிக்க வழி செய்யப்பட வேண்டும் – என்று கூறப்பட்டுளது.

உள்நாட்டுப் போர் நடந்து வரும் ஏமனில் கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டுப் பகுதியில் லட்சக்கணக்கான குழந்தைகள் உணவில்லாமல் தவித்து வருகின்றன எனவும் சமீபத்தில் நிலவும் விலைவாசி ஏற்றம் காரணமாகவும் ஏமனில் உணவில்லாமல் தவிக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை 50 லட்சத்தை நெருங்கியுள்ள தாகவும் 'சேவ் தி சில்ட்ரன்' என்ற தொண்டு நிறுவனம் சமீபத்தில் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

**ஏமன் போர்**

தென்மேற்கு ஆசிய நாடான ஏமன் நாட்டில் சன்னி பிரிவைச் சேர்ந்த அதிபர் மன்சூர் ஹைதிக்கும் ஷியா பிரிவைச் சேர்ந்த ஹவுத்தி கிளர்ச்சிப் படைக்கும் இடையே கடந்த 2015 மார்ச் முதல் உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது. இதில் அதிபர் மன்சூர் ஹைதிக்கு ஆதரவாக சவுதி அரேபியா செயல்படுகிறது. ஹவுத்தி கிளர்ச்சிப் படைக்கு ஈரான் ஆதரவு அளிக்கிறது.

சவுதி அரேபியா தொடர்ந்து ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் மீது குறிவைத்து ஏமனில் தாக்குதல் நடத்தி வருகிறது. ஈரானோ கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவு அளித்து வருகிறது.

இப்போரில் இதுவரை 11,000க்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களில் 5,000 பேர் குழந்தைகள்.

# சபரிமலை ஆலயச் சுற்றாடல் பகுதியில் பதற்றம்





திருவனந்தபுரம்,ஒக்.18

சபரிமலை அருகே நிலக்கல், பம்பா பகுதிகளில் பத்திரிகை யாளர்கள்வாகனம்மீதுதாக்குதல் நடத்தப்பட்டது.போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் தடியடியில் ஈடுபடும்நிலைமை அங்கு நேற்று மாலை ஏற்பட்டது.

சபரிமலைக்கு பெண்கள் வருவதற்கான தடையை உச்ச நீதிமன்றம் நீக்கியமையை அடுத்து அங்கு பெரும் பதற்ற மான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. பெண் பக்தர்கள் வருகையைத் தடுக்க மாநில அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்காததால் ஐயப்ப பக்தர்கள் ஆவேசம் அடைந்தனர். சபரிமலை கோவி லுக்குச் செல்லும் நுழைவு வாயி லான நிலக்கல்லில் குவிந்தனர். அங்கு சாலை மறியல், ஆர்ப் பாட்டம் நடத்தினர்.

நேற்று முன்தினம் மாலை தொடங்கிய போராட்டம் விடிய விடிய நடந்தது. இதனால் அங்கு பதற்றமும் பரபரப்பும் ஏற்பட்டது.

சபரிமலை கோவில் நடை ஐப்பசி மாத பூஜைக்காக நேற்று (புதன்கிழமை) மாலை திறக்கப்பட இருந்தது. அப்போது பெண் பக்தர்கள் கோவிலுக்கு வரு வார்கள் என்று கருதிய போராட் டக்காரர்கள், அவர்களை சபரிம லைக்குள் நுழைய விடாமல் தடுக்கும் முயற்சிகளில் ஈடுபட் டனர்.

நிலக்கல்லில் இருந்து சபரி மலைக்குச் செல்லும் அனைத்து வாகனங்களையும் போராட்டக் காரர்கள்தடுத்துநிறுத்திசோதனை செய்தனர். இதில் 10 வயதுக்கு மேல் 50 வயதுக்குட்பட்ட பெண்கள்இருந்தால்அவர்களை வலுக்கட்டாயமாகவாகனங்களில் இருந்து இறக்கி விட்டனர்.

நேற்று மாலை 5 மணியளவில் கோவில் திறக்கப்படவிருந்த நிலையில்,அங்குள்ளநிலைவரம் குறித்து செய்தி சேகரிப்பதற்காக ஏராளமான பத்திரிகையாளர்கள் மற்றும் தொலைக்காட்சி நிருபர்கள் நிலக்கல், பம்பை மற் றும் சபரிமலை கோவில் பகுதி யில் குவிந்துள்ளனர்.

இந்நிலையில், நேற்றுப் பிற்பகல் அவ்வழியாக ஒரு பெண் பத்திரிகையாளர் வந்த காரை போராட்டக்காரர்கள் தடுத்து நிறுத்தினர். அங்கிருந்து திரும்பிச் செல்லும்படி எச்சரித்தமையுடன் அவர் வந்த காரின் மீதும் தாக்குதல் நடத்தினர்.

நிலக்கல் பகுதியில் 'இந்தியா டுடே' பத்திரிகையின் பெண் நிருபர் மவுசமி சிங் என்பவரும் போராட்டக்காரர்களால் தாக்கப் பட்டார். அவரை மீட்ட பொலிஸார் பாதுகாப்பாக வாகனத்தில் ஏற்றிச் சென்றனர்.

## வீதியோரம் தூங்கியோர் மீது லொறி ஏறியதில் 6 பேர் சாவு!

■ 15பேர் படுகாயம்; ஆந்திரத்தில் பயங்கரம்

திருமலை,ஒக்.17

ஆந்திர மாநிலம் கர்னூலில் நேற்று அதிகாலை சாலையோரம் தூங்கிக் கொண்டிருந்தவர்கள் மீது லொறி மோதிய விபத்தில் 6 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர்.

ஆந்திர மாநிலம் கர்னூல் மாவட்டம் ஆளூரு மண்டலம் பெத்த ஓத்தூரு பகுதியைச் சேர்ந்தவர் கே் காஜா (வயது 27). இவரது மனைவி பாத்திமா.

இவர்களது குழந்தைக்கு மொட்டை போடுவதற்காக தங்களது உறவினர்கள் 21 பேருடன் 3 ஓட்டோக்களில் கர்னூல்அருகேயுள்ள எல்லாத்தி தர்காவுக்கு நேற்று அதிகாலை சென்றனர்.

கர்னூல் அருகே அவர்கள் சென்றபோது ஓர் ஓட்டோதிடீரென பழுதானது. ஓட்டோவை டிரைவர் சரி செய்து கொண்டிருந்தார். ஓட்டோவில் வந்தவர்கள் சாலையோரம் படுத்துத் தூங்கி கொண்டிருந்தனர். அப்போது அந்த வழியாக வந்த லொறி தூங்கி கொண்டிருந்தவர்கள் மீது ஏறி இறங்கியது.




இதில் கே் காஜா, பாத்திமா , உசேன் (வயது 23), ஆசிப் (7), அப்சரா (9), மெஜித் (7) ஆகிய 6 பேர் உடல் நசுங்கி சம்பவ இடத்திலேயே பரிதாபமாக இறந்தனர். 15 பேர் படுகாயம் அடைந்தனர். விபத்து ஏற் படுத்திய லொறி நிற்காமல் வேக மாகச் சென்று விட்டது.

இது குறித்துத் தகவல் அறிந்த கர்னூல் பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து படுகாயம் அடைந்தவர்களை மீட்டு அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

விபத்துக் குறித்து வழக்கு பதிவு செய்த போலீசார் விபத்து ஏற்படுத்திய லொறியைத் தேடி வருகின்றனர்.

## சபரிமலையைச் சுற்றி 30 கிலோ மீற்றர் பிரதேசத்தில் போராட்டம் நடத்தத் தடை

■ பல இடங்களில் 144 தடை உத்தரவும் பிறப்பிப்பு

திருவனந்தபுரம்,ஒக்.18

சபரிமலையில் பெண்களை பக்தர்கள் தடுத்து நிறுத்தியதால் பொலிஸாருடன் மோதல் வெடித்தது, இதனையடுத்து அப்பகுதியில் 144 தடை உத்தரவு அமல்படுத்தப்பட்டது.

சபரிமலை ஐயப்பன் கோவிலில் அனைத்துவயது பெண்களையும் அனுமதிக்க எதிர்ப்பு தெரிவித்து, நிலக்கல் பகுதியில் பக்தர்கள் போராட்டம் நடத்தினர். கோவி லுக்கு செல்லும் வாகனங்களை சோதனையிட்ட அவர்கள் பெண்களை கீழே இறக்கினர்.

செய்திசேகரிக்கச்சென்ற பெண் பத்திரிகையாளர்கள் மீதும் தாக்குதல்நடத்தப்பட்டது. மறுபுறம் பொலிஸார் பெண்களுக்கு பாதுகாப்பைகொடுக்கும்பணியை மேற்கொண்டனர். அங்கு போராட்டத்தில் ஈடுபட்டவர்களை பொலிஸார் தடியடி நடத்தி விரட்டினார்கள். இதனையடுத்து அங்கு பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. மாலை கோவில் திறக்கப்பட்டாலும் பெண்கள் யாரும் தரிசனத்திற்கு செல்ல வில்லை. இதற்கிடையே போராட்டம் நடத்தியவர்கள் பலரும் கைது




செய்யப்பட்டனர். அங்கு கூடுதல் பொலிஸார் வரவழைக்கப்பட்டு பாதுகாப்புஅதிகரிக்கப்பட்டுள்ளது.

மாலையும் நிலக்கல் பகுதியில் செய்தியாளர்கள் மற்றும் பிறரை ஏற்றிச்சென்ற பஸ்மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. பம்பையில் பாதுகாப்புஅதிகரிக்கப்பட்டுள்ளது. நேற்று நடைபெற்ற வன்முறை சம்பங்களுக்கு பின்னால் ஆர்.எஸ்.எஸ். மற்றும் பா.ஜனதா உள்ளன எனக் கேரளா அரசு குற்றம் சாட்டியுள்ளது.

**144 தடை உத்தரவு**

பெண்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து பக்தர்கள் போராட்டம் நடத்துவதால் அங்கு பதற்றமான சூழ்நிலை உள்ளது. இந்நிலையில் அங்கு 144இன்கீழ்தடைஉத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இலவங் கல், நிலக்கல், பம்பை, சன்னி தானம் ஆகியபகுதிகளில் 22ஆம் திகதி வரை இத் தடையுத் தரவு அமுலில் இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், சபரிமலையை சுற்றிலும் 30 கி.மீ. பகுதியில் போராட்டம் நடத்த வும் பொலிஸார் தடை உத்தரவு பிறப்பித்துள்ளனர். சட்டத்தை யார் கையில் எடுத்துக் கொண டாலும் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். வாகனங்களைத்தடுத்துநிறுத்தும் பக்தர்கள் கைது செய்யப் படுவதுடன் அவர்கள் மீது வழக்கும் பதிவு செய்யப்படும் என்றுபொலிஸ்தரப்பில்தெரிவிக் கப்பட்டுள்ளது.

## அலகாபாத்' நகரின் பெயர் மாற்றம் 'பிரயாக்ராஜ்' என அழைக்கப்படுமாம்

உத்தரப்பிரதேச மாநிலத்தின் வரலாற்றுமுக்கியத்துவம்வாய்ந்த நகரான அலகாபாத்தின்பெயரை மாற்றி, 500 ஆண்டுகளுக்கு முந்தைய பெயரான பிரயாக்ராஜ் என்று சூட்டியுள்ளது அந்த மாநிலத்தில் ஆட்சியிலிருக்கும் பா.ஜ.க. அரசு.

அலகாபாத் என்ற பெயர் சமீ பத்தில் வைக்கப்பட்டப் பெயர், பிரயாக்ராஜ் என்ற பெயரே பாரம்பரியமான பெயர் என்று விளக்கம் அளித்துள்ளார் முதல்வர் ஆதித்யநாத். இந்த பெயர்மாற்றத்துக்கான முடிவு அமைச்சரவையில் எடுக்கப்பட்டு முறைப்படி நேற்று அறிவிக்கப் பட்டது.

ஆனால், அலகாபாத் நகரின் பெயரைமாற்றியதற்குகாங்கிரஸ், சமாஜ்வாதி ஆகிய கட்சிகள் கடும் எதிர்ப்புத்தெரிவித்து வருகின்றன.

அலகாபாத் நகரின் பெயர் மாற்றம் குறித்து முதல்வர் யோகி ஆதித்யநாத் கோரக்பூரில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்:

கடந்த 500 ஆண்டுகளுக்கு முன் முகலாய மன்னர் அக்பர் காலத்தில் செய்யப்பட்ட தவற்றை இப்போதுள்ள பா.ஜ.க. அரசு சரி செய்துள்ளது. உண்மையில் அலகாபாத் என்ற பெயர் சமீபத்தில் வைக்கப்பட்டது. இப்போதுமாற்றப்பட்டபெயரான பிரயாக்ராஜ் என்ற பெயர்தான் 500 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த பெயர். மக்களின் உணர்வுகள், எண்ணங்கள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு இந்தப் பெயர் மாற்றப் பட்டுள்ளது.

மூன்று நதிகள் சங்கமிக்கும் திரிவேணி சங்கமம் அலகாபாத் தில் இருக்கிறது, இதனால்தான் இதற்கு பிரயாக்ராஜ் என்று பெயர் வந்தது.

பிரயாக்ராஜ் என்ற பெயரை எதிர்ப்பவர்கள், வரலாறு தெரி யாதவர்கள், கலாச்சாரம், பாரம் பரியம் அறியாதவர்கள். நாங்கள் அவர்களை நம்ப முடியாது. இமயமலையில் இருந்து ஏராள மான ஆறுகள் வந்தாலும் உண்மையில் இங்குதான் புண்ணிய நதிகள் பாய்கின்றன. இந்த இடம்தான் பிரயாக்ராஜ்.– இவ்வாறு ஆதித்யநாத் தெரிவித்தார்.

அலகாபாத் நகருக்கு பிரயாக் ராஜ்என்றபெயர்மாற்றப்பட்டதற்கு



காங்கிரஸ், சமாஜ்வாதிக் கட்சி ஆகியவை கடும் கண்டனம் தெரிவித்துள்ளன. காங்கிரஸ் கட்சியின் செய்தித் தொடர்பாளர் ஓங்கர் சிங் கூறுகையில், புதிதாக ஒரு நகரை உருவாக்கி, அதற்கு பிரயாக்ராஜ் என்று பா.ஜ.க. அரசு பெயர்சூட்டட்டும், ஆனால் அலகா பாத் நகரின் பெயரை மாற்றக் கூடாது என்று தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir



# சிங்கள, பௌத்தவாதிகள் என்றோ ஒருநாள் இந்தியாவைக் குற்றவாளிக் கூண்டில் ஏற்றுவர்



எஸ்.வி.கிருபாகரன்

**நேற்றைய தொடர்ச்சி**

உண்மையை பேசுவதனால், ராஜீவ் காந்தியின் கொலையுடன் சம்பந்தப்பட்டதாக இந்தியாவில் குற்றம் சாட்டப்பட்ட பல தனிநபர்கள், இன்று வரை விசாரணைக்கு உள்ளாக்கப்படாது சுதந்திரமாக நடமாடுவது மிக வியப்பிற்குரியது.

சிங்கள பௌத்த அரசியல்வாதிகளிடம், விசேடமாக ஶ்ரீலங்காவின் முன்னைய, இன்றைய ஜனதிபதிகளிடம் நான் கேட்க விரும்பும் முக்கிய விடயம் என்னவெனில், 2008ஆம், 2009ஆம் ஆண்டுகளில் இந்தியா இராணுவம் ஶ்ரீலங்காவில் நின்று தமிழீழ விடுதலை புலிகளிற்கு எதிராக போராடிய வேளையில், நீங்கள் கூறும் 'ஶ்ரீலங்காவின் இறையாண்மை, ஒருமைப்பாடு' என்பவை எங்குசென்றன? உண்மை என்னவெனில், ஶ்ரீலங்காவின் ராஜதந்திரிகள், இந்தியாவின் ராஜதந்திரிகளிற்கு மேலாக, பலமடங்கு கெட்டித்தனம் படைத்தவர்கள்.

2008ஆம், 2009ஆம் ஆண்டுகளில் தமிழீழ விடுதலைபுலிகளிற்கு எதிரான போரில் வெற்றிக்கண்டவர்கள் இந்தியா இராணுவத்தினர்.

இப்படியாக நிலைமைகள் காணப்பட்டாலும், ஶ்ரீலங்காவின் முன்னைய ஜனதிபதி, இராணுவத் தளபதி, பாதுகாப்புச்செயலாளர் தாமே யுத்தத்தில் வெற்றி பெற்றனர் எனஎந்தவித வெட்கமும் அற்று கபடநாடகம் ஆடுவது மிகவும் வேடிக்கையானது.

இப் பொய்யான நாடகங்கள் யாவும், தெற்கில் விடயங்கள் விளங்காது வாழும் அப்பாவி மக்களிற்கு திறமையாகக் காணப்படலாம், நிச்சயம் போரின் நிகழ்வுகளை நிமிடத்திற்கு நிமிடம் அவதானித்து கொண்டிருந்தவர்களுக்கு அல்லவே?

வன்னிப் போர் மிகவும் அகோரமாக நடந்தவேளையில், ஶ்ரீலங்காவின் ஆட்சியாளர்கள், தமிழீழ விடுதலைபுலிகள் அழிக்கப்பட்டதும், தாம் ஓர் நல்ல அரசியல் தீர்வை தமிழீழமக்களிற்கு முன்வைக்கவுள்ளனர் என சர்வதேசத்திற்கு, இந்தியா உட்பட பல நாடுகளிற்கு கூறிவந்தனர்.

ஆனால், இன்று 9 வருடங்களாகியும் அங்கு எதுவுமே நடைபெறவில்லை. ஆனால், இவற்றிற்கு எதிர்மாறாக சிங்கள குடியேற்றம், பௌத்த விகாரைகள் யாவும் வடக்கு மற்றும் கிழக்கில் இரவோடு இரவாக இடம்பெறும் இவ்வேளையில், அரசாங்கமும் அவர்களது கையாட்களும், 'ஶ்ரீலங்காவில் இன முரண்பாடு என்று ஒன்றே இல்லை' என பரப்புரைகளை மேற்கொள்கின்றனர்.

**வருடங்கள் கடத்தப்பட்டன**

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் முற்றுமுழுதாக சிங்களமயம் மற்றும் பௌத்தமயம் ஆக்கப்பட்ட பின்னர், தமிழ் மக்களும் சிங்கள மக்களும் சரிசமனாக வாழும் பொழுது, எதற்காக தமிழ் மக்களிற்கு என ஓர் பிரத்தியேக அரசியல் தீர்வை முன்வைக்க வேண்டும் என்பதை சிங்கள பௌத்தவாதிகள் கேட்கும் காலம் நெருங்கி வருகிறது.

சுருக்கமாகக் கூறுவதானால், இந்திய – இலங்கை ஒப்பந்தம் ஒருபக்கம் இருக்க, மறுபக்கம் தமிழ் அரசியல்வாதிகளினால் சமஷ்டிதீர்வு வருகிறது, அரசியல்தீர்வு வருகிறது என வருடங்கள் கடத்தப்பட்டதன் பலன் இவையாக தான் முடியுமா?

சிங்கள பௌத்த அரசுகளினால் தமிழீழ மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இறுதியுத்தத்தின் போது, நடைபெற்ற இனஅழிப்பின் பின்னணியில், நேரடியாகவோ மறைமுகமாகவோ இந்தியா இருந்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டை இன்று வரை இந்தியா அறியவில்லையா? இக்குற்றச்சாட்டு நாளுக்கு நாள், சிங்கள பௌத்த அரசியல்வாதிகளினால், விசேடமாக முன்னாள் ஜனாதிபதி மற்றும் தலைவர்களினால் கூறப்படுவதை ஒரு பொழுதும் இந்தியா மறுத்ததில்லையே!

ஶ்ரீலங்கா மீதான வெளிநாட்டு கொள்கையை முன்பு இந்தியா, உண்மை, நீதி ஆகியவற்றின் அடிப்படையில் ஓர் அரைநடுநிலையாக முன்னெடுத்தனர்.

பின்னர் அவர்களது கொள்கை முற்றுமுழுதாக சிங்கள, பௌத்த அரசுகளிற்கு ஆதரவு கொடுப்பதாக மாறியது.

இக்காலப்பகுதியில் ஏற்பட்ட தமிழீழ மக்களின் இனஅழிப்பு, இந்தியா சமாதானப்படையினால் மேற்கொள்ளப்பட்ட மோசமான மனிதஉரிமை மீறல்களுக்காக என்றோ ஒருநாள் இந்தியாவிடம் நியாயம் கேட்கும் காலம் வருவதை யாராலும் தடுக்க முடியாது.

ஆனால், இவற்றை நிச்சயம் ஈழத் தமிழர்கள் செய்ய போவதில்லை. இவற்றை செய்வதற்கு மிக ஆவலாக காத்து இருப்பவர்கள் சிங்கள பௌத்தவாதிகள் மற்றும் சீன,பாகிஸ்தான்.

இவையாவற்றையும் மனதில் கொண்டு, இந்தியா தமிழீழ மக்களிற்கு கொடுத்தவாக்குறுதிகளிலிருந்துதவறாது செயற்றிட்டத்தில் இறங்க வேண்டும்.

இந்தியா கொள்கை வகுப்பாளர், தமது தவறான கொள்கையினால், ஈழத்தமிழ்மக்கள் எவ்வளவு தூரம் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதை மனதில் கொண்டு எதிர்காலத்தை மனச்சாட்சி நிறைந்த செயற்றிட்டங்களுடன் செயற்பட வேண்டும்.

சிங்கள பௌத்தவாதிகளை பொறுத்தவரையில், இந்தியாவினால் மேற்கொள்ளப்பட்டவை எனக் கூறப்பட்ட சில வரலாற்று தவறுகளை அவர்கள் மன்னிப்பதற்கு தயாராக இல்லை. இவை பற்றி பல கட்டுரைகள் கடந்த காலங்களில் எழுதியுள்ளேன்.

**சில வரலாற்றுத் தவறுகள்**

சிங்கள பௌத்தவாதிகளை பொறுத்தவரையில், புத்தர் பிறந்ததும், பௌத்த சமயம் உருவானதுமான இடமான இந்தியாவில், பௌத்த சமயத்தின் அந்தஸ்து, மற்றைய நாடுகளுடன் ஒப்பிடும் பொழுது அவர்களிற்கு திருப்தியாகக் காணப்படவில்லை.

அதேவேளை, தமிழீழத்திற்கான ஆயுதபோராட்டத்தினை இந்தியாவே முன்னிலையில் நின்று நடத்தியது என்பது அவர்களது மனதுகளில் மிகவும் ஆழமாக பதிந்துள்ளது. ஆகையால், சீனாவின் செல்வாக்கு இந்து சமூத்திர பிராந்தியத்தில் சீராக அமையும் வரை, சிங்கள பௌத்தவாதிகள் காலம் நேரம் பார்த்து இருக்கின்றனர் என்பதே உண்மை.

இவையாவற்றின் சாட்சியங்களாக ஶ்ரீலங்கா அரசினால் மிக அண்மையில் சீனா, பாகிஸ்தான், ரஷ்யா, ஈரான் ஆகிய நாடுகளுடன் கைச்சாத்தான பாதுகாப்பு ஒப்பந்தங்கள் காணப்படுகின்றன.



இவை இந்தியாவிற்குள் உட்பிரவேசிக்கும் 'வாயில் வழி'யாக ஶ்ரீலங்காவே விளங்கவுள்ளது என்பதை தெளிவாக்கின்றன.

வங்கள தேசத்தின் பிறப்பிற்கு வழி வகுத்த 1971ம்ஆண்டு இந்தியா – பாகிஸ்தான் யுத்தத்தின் போது, பாகிஸ்தான் போர் விமானங்கள் கொழும்பில் தங்கி எரிபொருளை நிரப்பி சென்றன என்ற சரித்திரத்தை இந்தியக் கொள்கை வகுப்பாளர் மறந்திருக்க மாட்டார்கள் என நம்புகிறேன்.

இப்படியான சம்பவங்களிற்கு பின்னரும், சிங்கள பௌத்த தலைவர்கள் இந்தியாவிற்கு விசுவசமாக இருப்பார்கள் என இந்தியா நம்புவது முழுக் கேலிக்கூத்து.

மிக அண்மையில் ஐ.நா.மனித உரிமை சபைவேளையில், தமிழ்மக்கள் மீதான இன அழிப்பை நியாயப்படுத்துவதற்காக கொழும்பிலிருந்து ஜெனீவா வந்துள்ள ஒரு சிங்கள பௌத்த முன்னாள் இராணுவச் சிப்பாயினால் முன்வைக்கப்பட்ட வினா, இவர்கள் இந்தியாவை பழிவாங்குவதற்குத் தயாராகின்றனர் என்பதற்கு நல்ல உதாரணமாக அமைகிறது.

சர்வதேச பிரமுகர் ஜஸ்மீன் சூக்கா தமது அமைப்பினால் சேகரிக்கப்பட்ட சில சித்திரவதைகளின் ஆதாரங்கள் அறிக்கைகளை 39ஆவது கூட்டத் தொடர் வேளையில் சமர்பித்த பொழுது – சிங்கள சிப்பாயின் கேள்வி என்னவெனில் – வடக்கு மற்றும் கிழக்கு வாழ் தமிழ் பெண்கள் மீது இந்திய சமாதானப்படையினர் மேற்கொண்ட பாலியல் வன்முறைகள், சித்திரவதைகள் பற்றிய பட்டியல், ஜஸ்மீன் சூக்காவிடம் உள்ளதா என்பது தான்.

இதனது அர்த்தங்களை இந்தியா புரிந்து கொள்ளுமா? இவையாவும், சிங்கள, பௌத்தவாதிகள் என்றோ ஒரு நாள் இந்தியாவைக் குற்றவாளிக்கூண்டில் ஏற்றுவார்கள் என்பதற்கு நல்ல உதாரணமாக அமைகின்றன.

**மனவேதனைக்குரிய விடயம்**

அடுத்து, 2006ஆம் ஆண்டு ஜுலை மாதம் சிங்கள, பௌத்தவாதிகள் சிலர் – இணைந்திருந்த வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை பிரிப்பதற்கான வழக்கு ஒன்றை தொடுத்து அதில் வெற்றியும் கண்டனர்.

இதில் மிக மனவேதனைக்குரிய விடயம் என்னவெனில், இவ்வழக்கை அன்று தொடுத்தவர்கள், தாங்கள் இந்தியாவின் வேண்டுகோளிற்கு இணங்கவே தொடுத்தனர் உனக் கூறிவருகின்றனர்.

காரணம், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் பிரிந்திருக்கும் வேளையில், தமிழீழ விடுதலைப் புலிகளினால் தமிழீழ பிரகடனம் செய்ய முனைவது ஓர் தடை கல்லாக அமையும் என இந்தியா கூறியதாகக் கூறுகின்றனர்.

இந்தியா வடக்கு மற்றும் கிழக்கில் இன்று நடப்பவை பற்றிய நன்றாக அறியும். ஶ்ரீலங்கா அரசுகளை பொறுத்தவரையில், வடக்கு மற்றும் கிழக்கு தமிழர்களது தாயக பூமி அல்ல என்பதை நிரூபிப்பதற்காக அங்கு மூலைமுடுக்குகள் யாவும் சிங்கள குடியேற்றம் மற்றும் பௌத்த சிலைகளை நாட்டுதல் என்பன அசுரவேகத்தில் இடம்பெறுகின்றன.

ஶ்ரீலங்கா உண்மையில் பல்லின மக்கள் கொண்டு, பல மதங்கள் இரு மொழிகள் உள்ள நாடாக இருந்தால், 1948ஆம் ஆண்டு முதல் கதிர்காமத்திலிருந்து காங்கேசன்துறை வரை தீவைக்கப்பட்டு அழிக்கப்பட்டு, கலைக்கப்பட்ட தமிழ்மக்களது இருப்புக்கள், கோவில்கள், பாடசாலைகளில் ஏதாவது ஒன்றையாகுதல், இன்று வரை ஶ்ரீலங்கா மீளநிர்ணயித்திருக்க வேண்டும். இவ் அலட்சியங்கள், சரித்திரங்கள் மீளப்படுவதற்கு நிச்சயம் வழிவகுக்கும்.

இந்தியா, தமிழீழ மக்களிற்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாது அலட்சியம் செய்வது, காலப்போக்கில் இந்து சமுத்திரத்தில் இவர்கள் ஓர் பேச்சுப் பொருளாக மட்டுமே காணப்படுவார்கள்.

சில நாள்களிற்கு முன் ஈழத்தமிழர் ஒருவரினால் வெளியிடப்பட்ட கேப்டன் வீட்டில் (Dans la maison du Capitaine) என்ற ஓர் பிரெஞ்சு திரைப்படத்தை பார்வையிட்டேன்.

இத்திரைபடத்தில் ஈழத்தமிழர்களிற்கு ஓர் செய்தி கூறப்படுவதாக புலப்படுகிறது. சந்தர்ப்பம் கிடைத்தால் பார்வையிடுங்கள்.

(முற்றும்)

# ஆள்கள் வலிந்து காணாமலாக்கப்பட்டமையை அரசு பொறுப்புடன் ஒப்புக்கொள்வது அவசியம்

## காணாமலாக்கப்பட்டோர் பணியகத் தலைவர் கூறுகிறார்



கொழும்பு, ஒக்.18

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தாமாக காணமல்போகவில்லை. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டிருக்கின்றார்கள். இந்த உண்மையை அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும். வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்கள் என்பதை அரசு ஏற்றுக்கொண்டு பொறுப்புடன் செயற்பட வேண்டும். பொறுப்புக் கூறலை அரசு செய்ய வேண்டும் என்று தெரிவித்துள் ளார் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான பணியகத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ்.

காணாமல் ஆக்கப்பட்டோருக்கான பணியகம் தொடர்பாக விளக்கமளித்தல் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோரது உறவினர்களின் தேவைகள் தொடர்பாக அறிந்து கொள்ளல் என்பவற்றுக்காக கொழும்பில் நேற்று முன்தினம் மக்கள் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் கருத்துத் தெரிவித்த போதே சாலிய பீரிஸ் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டில் காணாமல் ஆக்கப்படுதல் இடம்பெறவில்லை, அவ்வாறான சம்பங்கள் நடக்கவில்லை என்று கூறுபவர்களைப் புறக்கணிக்க வேண்டும். நாட்டில் காணாமல் ஆக்கப்பட்டமை மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் இடம்பெற்றுள்ளமையை அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் எதிர்கொண்டுள்ள துன்பத்தை உணர்ந்து கொள்ள வேண்டும். அவ்வாறான சம்பவங்கள் இனியும் நிகழாது என்பதையும் உறுதிப்படுத்த வேண்டும்.

காணாமல் ஆக்கப்பட்டோருக்கான பணியகத்தின் பரிந்துரைகளுக்கு அமைய இழப்பீடு வழங்கப்படுவதால் அவர்கள் அவற்றைப்பெற்றுக் கொண்டு நீதியைக் கோரக் கூடாது என்பது பொருஎல்ல. காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான உண்மையை அறிந்து கொள்ளும் உரிமை இழப்பீடு வழங்குவதன் ஊடாக ஒருபோதும் மறுக்கப்படாது. உண்மையைத் தெரிந்து கொள்ளல், நீதியைப் பெற்றுக் கொடுத்தல், இழப்பீடு வழங்குதல் என்பன போன்ற எந்த நடவடிக்கையாலும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அனுபவித்த துன்பத்தை நிவர்த்தி செய்ய முடியாது.

இழப்பீடு வழங்குவதற்கான அலுவலகம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் நடக்கின்றன. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கு அதன்மூலம் இழப்பீடுகள் பெற்றுக் கொடுக்கப்படும். அரசால் அமைக்கப்படும் ஆணைக்குழுக்கள் மீது பரவலாக நம்பிக்கையீனம் காணப்படுகின்றது. குறிப்பாக காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகம் மீது வடக்கில் நம்பிக்கையற்ற நிலைமை வெகுவாகக் காணப்படுகின்றது.

இந்தப் பணியகம் அரசால் அமைக்கப்பட்டுள்ளபோதும் சுயாதீன ஆணைக் குழுவாகவே செயற்படுகின்றோம். சில முறைப்பாடுகள் சம்பந்தமாக சில நடவடிக்கை எடுத்துள்ளோம். அதைப் பகிரங்கமாகச் சொல்ல முடியாது.

எதிர்வரும் மாதங்களில் காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகத்துக்காக 12 பிரதேச அலுவலகங்கள் அமைக்கப்படவுள்ளன. 5 பிரதேச அலுவலகங்கள் வடக்கு மாகாணத்தின் முக்கிய இடங்களில் அமைக்கப்படவுள்ளன.

அரசால் நிறைவேற்றப்பட வேண்டிய பரிந்துரைகள் அடங்கிய இடைக்கால அறிக்கை ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பரிந்துரைகளில் உள்ளடக்கப்பட்ட விடயங்களைச் செயற்படுத்துவதன் ஊடாக மட்டும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் திருப்தியடைய வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கவில்லை. அவர்களின் உறவினர்கள் தொடர்பான உண்மை நிலைமை அறிந்து கொள்ளும் உரிமையை நாம் உறுதி செய்கின்றோம். அவர்களின் துன்பத்தை எதைக் கொண்டும் ஈடு செய்ய முடியாது என்பதையும் உணர்ந்துள்ளோம். - என்றார்.

# ஜனாதிபதி - பிரதமர் இடையே அமைச்சரவையில் வாக்குவாதம்

கொழும்பு, ஒக்.18

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்குக் கொள்கலன் முனையத் திட்டத்தை இந்தியாவுக்கு வழங்குவது தொடர்பாக, நேற்று முன்தினம் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் கடும் வாக்குவாதம் இடம்பெற்றதாக, கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

துறைமுக அபிவிருத்தி தொடர்பான, அமைச்சரவை பத்திரம் ஒன்றை அமைச்சர் மஹிந்த சமரசிங்க சமர்ப்பித்தமையை அடுத்தே, வாக்குவாதம் ஏற்பட்டது.

கிழக்கு முனையத்தின் மீது இந்தியா ஆர்வம் கொண்டுள்ளதாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வெளிப்படுத்தினார்.

அப்போது, எல்லாவற்றிலும் வெளிநாட்டுத் தலையீடுகள் தொடர்பாக, ஜனாதிபதி தனது தீவிர மான கவலையை வெளிப்படுத்தினார்.

கிழக்குக் கொள்கலன் முனையத்தை வழங்க முடியாது என்று தாம் ஏற்கனவே இந்தியாவுக்குக் கூறி விட்டார் எனவும், அவர்களுக்கு ஒரு முனையம் தேவைப்பட்டால், மேற்கு முனையத்தில் பார்த்துக் கொள்ள முடியும், அதற்கு முதலீடு செய்ய வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

தேசிய பொருளாதார சபைக் கூட்டத்துக்கு முன்னதாக இந்த அமைச்சரவைக் கூட்டம், இடம்பெற்றது.

ஜனாதிபதி செயலகத்தில் நடந்த தேசிய பொருளாதார சபைக் கூட்டத்துக்கு ஜனாதிபதி தலைமையேற்றிருந்த நிலையில், அந்தக் கூட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# 300 நாள்களில் 2,368 பேர் பலி!

## வீதி விபத்துகளைத் தடுக்க விழிப்படைவோம்

கொழும்பு, ஒக். 18

வீதி விபத்துக்களினால் இவ்வருடத்தில் இதுவரையான காலப் பகுதியில் 2 ஆயிரத்து 368 பேர் உயிரிழந்துள்ளனர் என்று சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சு தெரிவித்துள்ளது.

உயிரிழந்தவர்களில் பாத சாரிகள் 722 பேர் அடங்குகின்றனர். கடந்த 7 வருடங்களில் வீதி விபத்துக்களில் சிக்கிய 18 ஆயிரத்து 491 பேர் உயிரிழந்துள்ளனர்.

எனவே, விபத்துகளைக் கட்டுப்படுத்துவதற்கு எடுக்கப்பட வேண்டிய அவசர நடவடிக்கைகள் தொடர்பில் சட்டம், ஒழுங்கு அமைச்சு தீவிர கவனம் செலுத்தி வருகின்றது.

அரசால் விடுக்கப்படும் அறிவிப்புகளைச் சாரதிகள் உரிய வகையில் பின்பற்றுவதாகத் தெரியவில்லை. கடுமையான சட்டங்கள் அமுலுக்கு வந்தால் அதற்கும் எதிர்ப்பு வெளியிடுகின்றனர். இந்நிலைமை மாறவேண்டும் என்பதே சமூக ஆர்வலர்களின் கருத்தாகும்.

போருக்குப்பின்னர் இலங்கையில் விபத்துகளாலேயே அதிகளவானவர்கள் உயிரிழந்து வருகின்றனர் எனக் கூறப்பட்டது.

# ஊற்றங்கரை பிள்ளையார் ஆலயத்தில் இராணுவம் கொடி வணக்க வழிபாடு



இலங்கை இராணுவத்தின் 69 ஆவது ஆண்டு நினைவை முன்னிட்டு நாட்டையும் மக்களையும் பாதுகாப்போம் என்ற தலைப்பில் இலங்கை இராணுவத்தில் உள்ள 38 வகையான படை பிரிவுகளின் கொடிகள்நேற்றுமுன்தினம்முள்ளியவளை தண்ணீரூற்று ஊற்றங்கரை சித்திவிநாயகர் ஆலயத்தில் வைத்துச் சிறப்பு பூசைகள், வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்ட படைத் தலைமையகத்தின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலை கொண்டுள்ள 38 படைப்பிரிவுகளின் கொடிகள் படையினரின் பாண்ட் வாத்திய அணி வகுப்புடன் முள்ளியவளை முதன்மை வீதியில் இருந்து ஊற்றங்கரை பிள்ளையார் கோவில்வரை கொண்டுவரப்பட்டன.

அங்கு முல்லைத்தீவு மாவட்ட படைத்தலைமையகத் தளபதி மேஜர் ஜெனரல் துஷ்யந்த ராஜகுரு மற்றும் படைத் தளபதிகள் கொடிகளை எடுத்துச் சென்று பிள்ளையாருக்கு முன்னால் வைத்து வழிபாடுகளை மேற்கொண்டனர். (ஐ)

# கனடா மார்க்கத்தில் வசிக்கும் தமிழ்ப் பெண்ணைக் காணோம்

கனடாவில் மார்க்கம் பகுதியில் வசிக்கும் தமிழ் பெண் ஒருவர் காணாமல் போயுள்ளார் எனக் கனடா பொலிஸார் தெரிவித்துள்ளனர். காணாமல்போன பெண்ணை கண்டுபிடிக்க பொலிஸார் பொது மக்களின் உதவியை நாடியுள்ளனர்.

46 வயதான தமிழினி குகேந்திரன் என்ற பெண்ணே காணாமல் போயுள்ளார் என கனேடிய பொலிஸார் அறிவித்துள்ளனர்.

கடந்த 15ஆம் திகதி மாலை 6.30 மணியளவில் Brimley Road, Highglen Avenue பகுதியில் உள்ள அவரது வீட்டில் இறுதியாக அவர் அவதானிக்கப்பட்டுள்ளார். காணாமல் போன பெண் 5 அடி 3 அங்குலம் உயரம் கொண்டவர், 140 பவுண்ட் நிறையுடைவர் மற்றும் கறுப்பு நிற தலை முடியை கொண்டவர் எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

அவரை கண்டுபிடித்து கொடுக்குமாறு உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இவர் தொடர்பில் யாரும் அறிந்தால் உடனடியாக பொலிஸாருக்கு அறிவிக்குமாறும் கனடாவில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir



# ஆசிய விளையாட்டில் தங்கம்; வவுனியா வீரன் கௌரவிப்பு





வவுனியா கலாபொகஸ்வெவ பகுதியைச் சேர்ந்த சரித்த நிர்மல புத்திக்க இந்திரபால ஆசியா 2018 பரா விளையாட்டில் கலந்துகொண்டு தங்கப்பதக்கம் பெற்று இலங்கைக்குப் பெருமை சேர்த்துள்ளார்.

நேற்றுக் காலை இந்த விளையாட்டு வீரனை கௌரவிக்கும் நிகழ்வு வவுனியாவில் இடம்பெற்றது.

வடமாகாணசபை உறுப்பினர் தர்மபாலா செனவிரத்னவின் மூன்றுமுறிப்பு அலுவலகத்திலிருந்து கலாபோகஸ்வெவ பகுதிக்கு வாகனப்பேரணியாக விளையாட்டு வீரர் அழைத்துச் செல்லப்பட்டார். இதன்போது கிராம மக்கள் ஒன்று திரண்டு சாதனை வீரனை வரவேற்றனர்.

இந்தோனேசியா, ஜகார்த்தாவில் இடம்பெற்ற ஆசியா 2018 பரா விளையாட்டில் ஆசியாவில் நீளம் பாய்தலில் தங்கப்பதக்கம், மற்றும் 200 மீற்றர் ஓட்டத்தில் வெண்கலப் பதக்கத்தையும் பெற்றமையுடன், உயரம் பாய்தலில் 5 ஆவது இடத்தையும் பெற்று நாட்டிற்கு பெருமை சேர்ந்துள்ளார்.

இந்நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர் தர்மபால செனவிரட்ன, விளையாட்டு வீரர்கள், ஊர்மக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை, இந்த இளைஞர் கடந்த 2016ஆம் ஆண்டு டுபாய் நாட்டில் நடைபெற்ற ஆசிய விளையாட்டில் 100 மீற்றர், 200 மீற்றர் ஓட்டம், உயரம் பாய்தலில் பங்கு பற்றி பதக்கங்களை வென்றிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ-100)



# சனத் ஜெயசூரிய விவகாரம் அணியைப் பாதிக்காதாம்

இலங்கை அணியின் முன்னாள் வீரர் சனத்ஜெயசூரிய மீது ஐ.சி.சி. முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகள் இங்கிலாந்துடனான தொடரிலிருந்து இலங்கை வீரர்களின் கவனத்தைத் திருப்பாது என இலங்கை அணியின் முகாமையாளர் சரித் சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று நடந்த மூன்றாவது ஒருநாள் போட்டிக்கு முன்னதாக நிருபர்களிடம் கருத்து தெரிவிக்கையில் அவர் இதனை குறிப்பிட்டார்.

இலங்கை வீரர் தசுன் சானகவிடம் இது குறித்து நிருபர்கள் கேள்வி எழுப்பியவேளை, சனத் ஜெயசூரிய தொடர்பான கேள்விக்கு வீரர்கள் பதில் அளிப்பதில்லை என அணியின் முகாமைக் குழுவினர் தீர்மானித்துள்ளனர் எனக் குறிப்பிட்டார்.

அணி தொடர்பில் சனத் ஜெயசூரிய எந்தவித தொடர்பையும்கொண்டிராதமையால் இங்கிலாந்துடனான தொடரிலிருந்து சனத் ஜெயசூரிய விவகாரம் எங்கள் கவனத்தைத் திருப்பாது என அணியின் முகாமையாளர் கூறினார்.

இதேவேளை ஓர் அணியாக நாங்கள் இந்த விடயம் குறித்து கருத்து கூறுவதை தவிர்த்துக்கொள்வோம் எனவும் அவர் தெரிவித்தார்.

# ஆஸ்திரேலியா ஒருநாள் தொடர்: தென்னாபிரிக்கா அணி அறிவிப்பு

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி, ஆஸ்ரேலியாவுக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டு ஒருநாள் தொடர் ரி-20 போட்டிகளில் விளையாடவுள்ளது.

அங்கு செல்லும் தென்னாபிரிக்கா அணி, மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர், ஒரேயொரு ரி-20 போட்டியிலும் விளையாடுகிறது.

இத்தொடரை எதிர்கொள்ளும் தயாராகும் வகையில், இரு அணிகளும் தங்களைத்தயார்படுத்திக்கொண்டுவருகின்றன.

இதற்கிடையில் முதலில் நடைபெறும் ஒருநாள் தொடருக்கான தென்னாபிரிக்கா அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

டு பிளிசிஸ் தலைமையிலான தென்னாபிரிக்கா அணியில், காயத்தில் இருந்து மீண்டுள்ள வேகப்பந்து வீச்சு, சகலதுறை வீரர் கிறிஸ் மோரிஸ் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

மேலும், துடுப்பாட்ட சகலதுறை வீரரான பர்ஹான் பெஹார்டியன், அணிக்குள் உள்வாங்கப்பட்டுள்ளார். அவர் கடந்த பெப்ரவரி மாதம் இந்தியா அணிக்கெதிராக விளையாடியிருந்தார்.

இதுதவிர அணியின் அனுபவமிக்க ஆரம்பதுடுப்பாட்ட வீரரான ஹசிம் அம்லா ஏற்கனவே இத்தொடரில் விளையாடமாட்டார் என அறிவிக்கப்பட்டிருந்ததன் அடிப்படையில் அவரும், அணியில் இணைத்துக் கொள்ளப்படவில்லை. அவருக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, அணியின் சகலதுறை வீரரான ஜே.பி. டுமினி அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். கடந்த தொடர்களில் இடம்பெற்றிருந்த முல்டர் அணியில் இடம்பெறவில்லை.

மேலும், வேகப்பந்து வீச்சாளரான டேல் ஸ்டெயின் மற்றும் சுழற்பந்து வீச்சாளர் இம்ரான் தாஹீர் ஆகியோர் அணியில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். அதேபோல வேகப்பந்து வீச்சாளரானடுவைன்பிரோட்டோரியசும்அணியில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளார்.

ஜே.பி. டுமினி தலைமையிலான அணியில் பர்ஹான் பெஹார்டியன், குயிண்டன் டி கொக், ரீசா ஹென்ரிக்ஸ், இம்ரான் தாஹிர், ஹெய்ன்ரிச் கிளாசன், மார்கிராம், டேவிட் மில்லர், கிறிஸ் மேரிஸ், கிறிஸ் மோரிஸ், லுங்கி நிகிடி, பெலுக்வாயோ, டுவைன் ப்ரோட்டோரியஸ், ரபாடா, ம்சி, ஸ்டெயின் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இரு அணிகளுக்கிடையிலான முதலாவது ஒருநாள் போட்டி, எதிர்வரும் நவம்பர் மாதம் 4ஆம் திகதி, பேர்த் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

# நான் நேர்மையானவன் சனத் தன்னிலை விளக்கம்



நான் எப்போதும் நேர்மையாகவும் வெளிப்படைத் தன்மையுடனும் நடந்துகொண்டேன் என இலங்கை அணியின் முன்னாள் தலைவரும் தெரிவுக்குழுவின் தலைவருமான சனத் ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

ஐ.சி.சி. ஊழல் தடுப்பு விதிமுறைகளின் கீழ் சனத் ஜெயசூரியவுக்கு எதிராக இரண்டு குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளமை கிரிக்கெட் உலகில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ள நிலையிலேயே சனத் ஜெயசூரிய இது தொடர்பில் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

ஐ.சி.சி. எனக்கு எதிராக ஆட்டநிர்ணயச் சதி தொடர்பான எந்தக் குற்றச்சாட்டுகளையும் முன்வைக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

ஐ.சி.சியின் ஊழல் தடுப்புப் பிரிவின் விசாரணைகளில் ஒத்துழைக்கவில்லை என்ற குற்றச்சாட்டு மாத்திரமே முன்வைக்கப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நான் மேலதிகமாக எந்தக் கருத்துக்களையும் வெளியிடும் நிலையில் இல்லை. எனது குற்றச்சாட்டுகள் குறித்து எந்தவித கருத்துக்களையும் வெளியிடவேண்டாம் எனச் சட்ட ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு கருத்துக்களை வெளியிட்டால் அது ஐ.சி.சியின் விதிமுறைகளை மீறியதாக அமையும் எனவு அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, ஜெயசூரியவிடம் பலமுறை பேச்சுக்களை மேற்கொண்ட பின்னரே ஐ.சி.சி. இந்தக் குற்றச்சாட்டுகளை சுமத்தியுள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

முக்கியமாக சனத் ஜெயசூரியவின் கையடக்கத் தொலைபேசியே பிரச்சினையாகவுள்ளது. அவர் அந்த கையடக்கத் தொலைபேசியை ஐ.சி.சியினரிடம் ஒப்படைக்க மறுத்துள்ளார் அது குறித்தே பேச்சுக்கள் இடம்பெற்றுள்ளன எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. சனத் ஜெயசூரியவின் தனிப்பட்ட அந்தரங்க வீடியோக்கள் அந்த கையடக்கத் தொலைபேசியில் உள்ளன. அவற்றை ஐ.சி.சி. அதிகாரிகள் பார்ப்பதை அவர் விரும்பவில்லை. அதன் காரணமாகவே அவர் அதை கையளிக்க மறுக்கின்றார் எனவும் கூறப்பட்டுகின்றது.

# மெக்ஸிக்கோ ஒலிம்பிக் 50 ஆண்டுகள் பூர்த்தி!




1968 ஆம் ஆண்டு ஒலிம்பிக் விளையாட்டு ஆரம்பித்ததன் 50 ஆண்டு பூர்த்தியை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மெக்ஸிக்கோ நகரம் நினைவு கூர்ந்துள்ளது.

லத்தீன் அமெரிக்க நாடான மெக்ஸிக்கோவில் ஆரம்பிக்கப்பட்ட ஒலிம்பிக் விளையாட்டுக்கள் இன்றுவரை விளையாட்டு உலகுக்கு ஊக்கமளிக்கும் வகையிலேயே அமைந்திருக்கின்றன.

மேலும் பல தசாப்த காலங்களுக்கும் ஊக்கமளிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையில் இந்த நினைவு கூரல் நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன.

1968 ஒலிம்பிக் போட்டிகள் சர்வதேச அளவிலான போட்டிகளிலும் உள்ளக ரீதியிலான போட்டிகளிலும் இடம்பிடித்தன.

அதுமட்டுமின்றி, அவன்ட் கார்ட் லோகோ (avant-garde logo) , நவீன அரங்க வடிவமைப்புக்கள் மற்றும் செயற்கைக் கோள் தொழில்நுட்பத்துடன் அந்த ஆண்டில் பெருமளவானோர் பார்வையிட்ட விளையாட்டு நிகழ்ச்சிகளில் ஒன்றாகவும் இருந்தது.

1968 ஒலிம்பிக்கில் விளையாடிய உயரம் பாய்தல் வீரர் டிப் ஃபோஸ்பரி (Dick Fosbury) போன்றோர் புதிய தடகள நெறிமுறைகளையும் உருவாக்கியிருந்தனர்.

மெக்ஸிக்கோ அரசுக்கு எதிராக மாணவர்களும் மக்களும் நடத்திய போராட்டங்களில் இராணுவ வீரர்களின் வன்முறையால் நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். இவ்வாறு நினைவில் நிற்கும் தருணங்களையும் அந்த ஒலிம்பிக் விளையாட்டு கண்டிருந்தது. அத்தோடு சமூக பொருளாதார அழுத்தங்களையும் எதிர்கொண்டிருந்தது. இன்றுவரை ஒலிம்பிக் போட்டிகளை நடத்திய லத்தீன் அமெரிக்க நாடுகளாக மெக்ஸிகோவும், பிரேஸிலுமே உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

## கைதிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல்கைதிகள்விடுதலை தொடர்பில் ஜனாதிபதிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் இடையிலான முக்கிய சந்திப்பு ஒன்று நேற்று நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது.

இதன்போதே மேற்படி தீர்மானம் எட்டப்பட்டதாகக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் கூட்டமைப்பு நேற்று வெளியிட்ட ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

தமிழ் அரசியல் கைதிகளின் விடயம் சம்பந்தமாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன் தலைமையில் நேற்றுச் சந்தித்து உரையாடினார்கள்.

இப்பேச்சின்போது கூறப்பட்ட விடயங்கள் பின்வருமாறு:

1. அரசியல் கைதிகளின் விடயம் சட்ட ரீதியாக மாத்திரம் பார்க்கப்பட வேண்டிய ஒன்றல்ல. இது தமிழ்த் தேசியப் பிரச்சினையுடன் தொடர்புடைய விடயம். ஆதலால் இது, அரசியல் ரீதியாக எதிர்நோக்கப்பட வேண்டும். இதுவரை இது அரசியல் ரீதியாக அணுகப்பட்டிருக்கவில்லை. அரசியல் ரீதியாக அணுகப்பட வேண்டும் என நாம் வலியுறுத்தினோம்.

2.யுத்தம் முடிவடைந்து 9 வருடங்கள் கடந்து விட்டன. யுத்தம் முடிவடைந்தவுடன் அரசியல் கைதிகளின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டிருக்கவேண்டும். ஆனால் அது நடைபெறவில்லை. அரசியல் கைதிகள் நீண்டகாலமாக சிறையில் இருக்கிறார்கள். அவர்களைத் தொடர்ந்து சிறையில் தடுத்து வைத்திருப்பது மனிதாபிமானமற்றது. அவர்களுக்கு எதிராகத் தாமதம் இல்லாமல் தண்டனை வழங்கியிருந்தால் தற்போது தண்டனைக்காலம் நிறைவேறி வெளியே வந்திருப்பார்கள்

3.இவர்கள் அனைவரும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டனர். பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் குற்றம் சுமத்தப்பட்டனர். பலருக்குப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்கு மூலமே அவர்களுக்கெதிரான சாட்சியமாக இருக்கிறது. இலங்கை அரசு பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதற்கு புதிய சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கிறது. இப்புதிய சட்டத்தில் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சாட்சியமாக முடியாது. இந்தச் சூழலில் கைதிகள் விடுதலை செய்யப்படவேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டது.

4. 1971ஆம் ஆண்டும் 88, 89 ஆம் ஆண்டுகளிலும் மக்கள் விடுதலை முன்னணியைச் சேர்ந்தவர்கள் அரசுக்கு எதிராக ஆயுதமேந்தி போராடினார்கள். அவர்களில் பலர் விடுவிக்கப்பட்டார்கள். யுத்தம் முடிவடைந்த பின்பு முன்னைய அரசின் தீர்மானத்தின் படி அரசுக்கு எதிராக ஆயுதமேந்தி போராடிய 12 ஆயிரம் போராளிகளுக்குப் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு அவர்கள் விடுவிக்கப்பட்டார்கள். ஆகையால் இந்தக் கைதிகளைத் தொடர்ந்து சிறையில் அடைத்து வைத்திருப்பது நியாயமற்றது. அவர்களும் விடுவிக்கப்படவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

5. சிறைக்கைதிகள் சிறையில் உண்ணாவிரதம் இருந்து போராட்டங்களை நடத்தியிருக்கிறார்கள். எமது வேண்டுகோளுக்கு இணங்க அந்தப் போராட்டத்தை தற்காலிகமாக நிறுத்தியுளார்கள்.பொது அமைப்புக்களும், மக்களும், பல்கலைக்கழக மாணவர்களும் பலவித போராட்டங்களை நடத்தி வருகிறார்கள். இவையெல்லாம் தமிழ் மக்களுடைய உணர்வுகளைப் பிரதிபலிக்கின்றன.

6. தமிழ் மக்களின் கருத்து, கைதிகள் தமிழர்களாக இருக்கிற காரணத்தினால்தான், அரசு போதிய அக்கறை செலுத்தாமல் இருக்கிறது என்பதாகும். இது நல்லிணக்கத்திற்கு பாதகமானது என்பதனையும் நாம் வலியுறுத்தினோம்.

இவை அனைத்தையும் கேட்டு ஜனாதிபதி அடுத்த வாரம் பிரதமர், சட்டமா அதிபர் மற்றும் தேவையான அனைவரையும் அழைத்து இந்த விடயத்தைச் சாதகமாக அணுகி, கைதிகளின் விடுதலையை எவ்விதமான முறையில் நிறைவேற்றலாம் என்பதை முடிவு செய்வதாகத் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, செல்வம் அடைக்கலநாதன், எம். ஏ சுமந்திரன், எஸ்.சிவமோகன் மற்றும் கவீந்திரன் கோடீஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஐ)

## என்னைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் படுகொலைச் சதிக்குப் பின்னால், இந்தியாவின் 'றோ' புலனாய்வுப் பிரிவே இருந்தது என்று அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி தெரிவித்தார் எனத் தனது பெயரை வெளியிட விரும்பாத அமைச்சர் ஒருவர், 'எக்கொணமி நெக்ஸ்ட் – (ECONOMY NEXT) ஊடகத்துக்குத் தெரிவித்துள்ளார்.

இந்தச் சதித் திட்டம் தொடர்பாகக் குற்றப் புலனாய்வுப் பிரிவு நடத்தும் விசாரணையையிட்டு தாம் மகிழ்ச்சியடையவில்லை என்றும், விசாரணைகள் மெதுவாகவே முன்னெடுக்கப்படுகின்றன எனவும், சட்டம், ஒழுங்கு அமைச்சரைப் பார்த்து ஜனாதிபதி மைத்திரி கூறியுள்ளார்.

இந்தக் கூட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அசாதாரண மான உறுதியுடன் இருந்தார் என்றும், தனது அரசு மீது ஜனாதிபதி கூறிய குற்றச்சாட்டுகளையிட்டு அவர் அதிருப்தியுடன் காணப்பட்டார் என்றும் அமைச்சரவை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தியப் புலனாய்வுப் பிரிவு மீது குற்றம்சாட்டிய மைத்திரிபால, மேலதிக விவரங்கள் எதையும் வெளியிடவில்லை என்று தெரிவித்த அமைச்சரவை வட்டாரம், மைத்திரியின் இந்தக் குற்றச்சாட்டினால் அமைச்சர்கள் அதிர்ச் சியுடன் காணப்பட்டனர் என்றும் தெரிவித்துள்ளது.

அவர் தனது குற்றச்சாட்டுக்கு ஆதாரம் எதையும் வழங்காதமையால், அதன் மீது அக்கறை கொள்ளவேண்டியதில்லை என்று நான் நினைக்கிறேன் என அமைச்சர் ஒருவர் கூறியுள்ளார்.

அதேவேளை, படுகொலைச் சதி தொடர்பான விவரங்களை வெளியிட நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் ஒரு செய்தியாளர் சந்திப்புக்கு ஒழுங்கு செய்யப்பட்டது. எனினும், கடைசி நேரத்தில் அது நிறுத்தப்பட்டது. அந்தச் செய்தியாளர் சந்திப்பை ஜனாதிபதி மைத்திரியின் முன்னாள் இணைப்பு அதிகாரியும் தற்போதைய மூத்த ஆலோசகருமான சிறிலால் லக்திலக நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது.

இந்தியப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்த வாரம் இந்தியாவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ள நிலையில், இந்தியப் புலனாய்வுப் பிரிவான 'றோ' மீது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சுமத்தியுள்ள குற்றச்சாட்டு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (ஐ)

## மைத்திரியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியத் தூதுவர் தரஞ்சித் சிங் சந்துவுக்குமிடையிலான அவசர சந்திப்பு ஒன்று நேற்று முற்பகல் கொழும்பில் நடைபெற்றது.

தன்னைக் கொல்ல இந்தியப் புலனாய்வுப் பிரிவான 'றோ', சதித்திட்டம் தீட்டியுள்ளது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன் தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் கருத்து வெளியிட்டார் என ஊடகங்களில் செய்திகள் வெளியாகின.

இதையடுத்து இவ்விவகாரம் தேசிய ரீதியில் மட்டுமன்றி சர்வதேச மட்டத்திலும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே நேற்று முற்பகல் ஜனாதிபதியை, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அவசரமாகச் சந்தித்துப் பேச்சு நடத்தினார் என்று அறியமுடிகின்றது.

இந்தியப் பிரதமரால் விடுக்கப்பட்ட விசேட செய்தியொன்றையும் ஜனாதிபதிக்கு அவர் தெரியப்படுத்தினார் என அறியமுடிகின்றது.

இதன்போது பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில் உத்தியோகப்பூர்வமாக எவ்வித தகவல்களும் இன்னும் வெளியாகி வில்லை. எனினும், சந்திப்பு இடம்பெற்றதை ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு உறுதிப்படுத்தியுள்ளது. (ஐ)

## மைத்திரிபாலாவுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவசரத் தொலைபேசி உரையாடலொன்று இடம்பெற்றுள்ளது.

தன்னைக் கொல்ல இந்தியப் புலனாய்வுப் பிரிவான 'றோ' சதித்திட்டம் தீட்டியுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அமைச்சரவைக் கூட்டத்தில் குற்றம்சாட்டினார் என்ற பரபரப்புத் தகவல் நேற்று ஊடகங்களில் வெளியாகியதை அடுத்து இந்திய உயர்மட்டத்திலும் அது பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தது.

இந்நிலையிலேயே நேற்று மாலை இந்தியப் பிரதமர் மோடி ஜனாதிபதி மைத்திரிபாலவுடன் அவசரமாகத் தொலைபேசியில் பேச்சு நடத்தியுள்ளார்.

இது குறித்து ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்ட அறிக்கையில் –

தொலைபேசி உரையாடலில் இரு நாட்டுத் தலைவர்களும் நட்பு ரீதியான கலந்துரையாடலில் ஈடுபட்டமையுடன், தற்போது இலங்கையில் மேற்கொண்டுவரும் அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பிலும் கலந்துரையாடினர்.

இலங்கையின் சுபீட்சத்திற்கும் அபிவிருத்திக்கும் தேவையான அனைத்துவித உதவிகளையும் வழங்குவதாக இந்தியப் பிரதமர் தெரிவித்தார்.

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலான நட்புறவு தொடர்ந்தும் வலுவுடன் காணப்படுமெனப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

அயல்நாடுகளுடனும் ஏனைய உலக நாடுகளுடனும் நட்புறவையும் நெருக்கமான தொடர்புகளையும் பேணி பாதுகாப்பதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்து மகிழ்ச்சியடைகிறார் எனவும் இந்தியப் பிரதமர் தெரிவித்தார்.

நெருங்கிய நண்பனாகவும் அயல்நாடு என்ற வகையிலும் இலங்கையின் அபிவிருத்திக்கும் முன்னேற்றத்திற்கும் இந்தியாவிடமிருந்து கிடைக்கப்பெறும் ஒத்துழைப்புகளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதன்போது பாராட்டினார் – என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## 'றோ'வின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றோவின் முகவராக இருக்கவேண்டும். இதனை இந்தியப் பிரதமர் அறியாமல் இருக்கலாம்.

– இப்படி நேற்று முன் தினம் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி மைத்திரிபால கூறினார் என்று அமைச்சரவை வட்டாரங்களில் இருந்து தெரிய வந்துள்ளது.

தன்னைக் கொல்ல இந்தியப் புலனாய்வுப் பிரிவான 'றோ' சதித்திட்டம் தீட்டியுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியுள்ள குற்றச்சாட்டு, இந்திய – இலங்கை உறவுகளைத் தீவிரமாகப் பாதிக்கக் கூடிய ஒரு நடவடிக்கையாக இருக்கும் என்று இந்தியாவில் இருந்து வெளியாகும் ஆங்கில நாளிதழான 'தி ஹிந்து' தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரி நேற்று முன் தினம் நடந்த வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தில் உரையாற்றியபோது, இந்தியப் புலனாய்வுப் பிரிவு தன்னைக் கொல்ல முயற்சிப்பதாகத் தனது அமைச்சர்களிடம் கூறியுள்ளார். ஆனால், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு இது தெரியாமல் இருக்கக்கூடும் என்றும் மைத்திரி கூறினார் என அந்த அமைச்சரவைக் கூட்டத்தில் பங்கேற்ற வட்டாரங்களில் இருந்து அறியப்படுகின்றது.

கைது செய்யப்பட்ட இந்தியர், என்னைக் கொல்ல முயற்சிக்கும் றோவின் முகவராக இருக்க வேண்டும். இதனை இந்தியப் பிரதமர் அறியாமல் இருக்கலாம். இது பெரும்பாலும் வழக்கம்தான். சி.ஐ.ஏயின் இது போன்ற நடவடிக்கைகள் ட்ரம்ப்புக்கும் தெரியாமல் இருக்கலாம் என்று மைத்திரி உரையாற்றியுள்ளார். அவர் அப்படிக் கூறியது எமக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது என்று, தமது பெயரை வெளிப்படுத்த விரும்பாத ஒரு வட்டாரம் ஒன்று தெரிவித்துள்ளது. (ஐ)

## சி.வீ.கே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலமைகளை அவதானித்துள்ளது.

மாகாணசபை உறுப்பினா ஜீ.ரி.லிங்கநாதனினதும், வெடுக்குநாறி ஆதி லிங்கேஸ்வரர் ஆலய நிர்வாகத்தினதும் கோரிக்கைக்கு அமைவாக மாகாணசபை உறுப்பினாகள் குழு வெடுக்குநாறிமலைக்கு சென்றிருந்தது.

இதன்போது வெடுக்குநாறி மலை ஆலயத்தின் நிர்வாக சபைச் செயலாளரும், நெடுங்கேணிப் பிரதேச சபை உறுப்பினருமான தமிழ்செல்வன், வனவளத் திணைக்களம், தொல்லியல் திணைக்களம் ஆகியவற்றால் வெடுக்குநாறி மலைமற்றும் அதனைச்சூழவுள்ள காடுகள், ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் ஆகியன பறிபோகும் அபாயத்தில் உள்ளமையைச் சுட்டிக்காட்டி, அவற்றைப்பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார்.

இதற்குப் பதிலளித்த அவைத் தலைவா சி.வீ.கே.சிவஞானம், தமிழாகளின் தொன்மையான வரலாற்றுச் சான்றாதாரங்களை தன்னகத்தே கொண்ட பகுதியாக வெடுக்குநாறிமலை காணப்படுகின்றது. இது தமிழாகளுக்குச் சொந்தமான பகுதி. இங்கே வனவளத் திணைக்களம் தற்போது மக்களை அச்சுறுத்தி அடிபணிய வைப்பதற்கு முயற்சிக்கின்றது.

ஆனால் தமிழாகளுக்குச் சொந்தமான சொத்தைத் தமிழர்களிடம் ஒப்படைக்கவேண்டும். மக்கள் தொன்றுதொட்டு வெடுக்குநாறி மலையில் உள்ள ஆலயத்தில் செய்து வந்த வழிபாடுகளைச் செய்ய ஆவன செய்ய வேண்டும்.

இது குறித்து ஜனாதிபதி மற்றும் பிரதமா ஆகியோருக்கு வடமாகாணசபை உடனடியாகவே கடிதம் எழுதவுள்ளது. – என்றார். (ஐ-07)

## 'றோ' சதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிராகரித்துள்ளது.

இது தொடர்பில் நேற்று மாலை விசேட அறிக்கையொன்றை விடுத்துள்ள ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு, இலங்கைக்கும், இந்தியாவுக்குமிடையிலான உறவு வலுவாகவே இருக்கின்றது எனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளாவது:–

கடந்த செவ்வாய்க்கிழமையன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்திய புலனாய்வுச் சேவையொன்றுடன் தொடர்புபடுத்தி கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன என வெளியிடப்பட்ட உள்ளூர் மற்றும் ஊடகச் செய்திகள் தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு கவனம் செலுத்தியுள்ளது.

ஜனாதிபதியைப் படுகொலை செய்ய மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படும் சதி முயற்சியில் இந்திய உளவுத்துறையின் எந்தவொரு ஈடுபாடு குறித்தும் ஜனாதிபதி இதன்போது கருத்துத் தெரிவிக்கவில்லை என்பதை ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெளிவுபடுத்த விரும்புகின்றது.

அமைச்சரவைக் கூட்டத்தில், ஜனாதிபதியைப் படுகொலை செய்வதற்காக மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கும் சதித் திட்டம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. படுகொலைச் சதி முயற்சி தொடர்பில் விரிவான விசாரணையொன்று நடத்தப்பட வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி இந்தக் கூட்டத்தில் வலியுறுத்தினார்.

இந்த அமைச்சரவைக் கூட்டத்தின்போது கலந்துரையாடப்பட்ட ஏனைய விடயங்களுள் பல்வேறு சந்தர்ப்பங்களில் கலந்துரையாடப்பட்ட கொழும்புத்துறைமுகத்தின் கிழக்கு முனையைத்தின் அபிவிருத்தி பற்றிய கலந்துயைாடலும் உள்ளடங்குகின்றது. இதன்போது தேசிய பொருளாதாரத்தின் நன்மைக்கு இலங்கை, ஆழ்கடல் துறைமுக முனையம் ஒன்றினை கொண்டிருக்க வேண்டியதன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி விளக்கினார்.

தற்போதுள்ள அரசு ஆட்சிக்கு வந்தது முதல் இந்தியாவும் இலங்கையும் மிக நெருங்கிய நல்லுறவையும் ஒத்துழைப்பையும் பேணிவருகின்றன. பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கு காரணமாக அமையும் வகையில் இரு நாடுகளுக்கும் இடையில் பல்வேறு உயர்மட்ட விஜயங்களும் இடம்பெற்றுள்ளன.

இந்தியத் தூதுவர் இன்று (நேற்று) காலை ஜனாதிபதியைச் சந்தித்தபோது இதனுடன் தொடர்பான அனைத்து விடயங்களும் தெளிவுபடுத்தப்பட்டமையுடன் இரு தரப்பு உறவுகளும் உறுதிப்படுத்தப்பட்டன என்பதை ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட விரும்புகிறது.

இந்தச் சூழ்நிலையில், இரு நாடுகளுக்கும் இடையில் இருந்து வரும் நல்லுறவுகளுக்கும் இரு தலைவர்களுக்கும் இடையிலான சிறந்த தனிப்பட்ட தொடர்புகளுக்கும் பங்கம் விளைவிக்கும் வகையில் சில உள்நோக்கம் கொண்ட தரப்புகளால் இத்தகைய திரிபுபடுத்தப்பட்ட விடயங்கள் பரப்பப்படுதல் மிகவும் கவலைக்குரியதாகும். – என்றுள்ளது. (ஐ)

காலைக்கதிர் Kalaikkathir



# குற்றம் இழைத்த இராணுவத்தினர் தராதரம் பாராது தூக்கிலிடப்படுவர்

## கூறுகிறார் அமைச்சர் ராஜித சேனாரத்ன



கொழும்பு, ஒக். 18

குற்றமிழைத்த இராணுவத்தினர் பதவி, தராதரம் பாராது தூக்கிலிடப்படுவார்கள் என அமைச்சரவையின் இணைப் பேச்சாளர் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

தாஜுதீன், மற்றும் லசந்த கொலையாளிகள், பிரகீத் எக்னெலி கொடவைக் கடத்தியவர்கள் எனச் சகலரையும் கூட்டாகத் தூக்கிலிடுவோம் என்றும் அவர் கூறினார்.

கொழும்பில் நேற்று அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்தச் செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அமைச்சர், செய்தியாளர் எழுப்பிய கேள்விக்குப் பதில் வழங்கியபோதே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் –

இன்று உங்களுக்கும் இந்த நாட்டு மக்களுக்கும் சுதந்திரம் கிடைக்கவில்லையா? ஜனநாயகமும், உங்கள் உரிமையும் கிடைக்கவில்லையா? இன்று நீங்கள் பிரதமரையும், ஜனாதிபதியையும் கடுமையாக விமர்சிக்கின்றீர்கள். உங்களுக்கு ஏதேனும் நடந்ததா?

உங்கள் லசந்த எங்கே? நாம் லசந்த கொலையாளிகளைக் கண்டுபிடிக்க வேண்டாமா? தங்களைச் சிறைக்குள் தள்ள முயற்சிப்பதாக மஹிந்த கூறுகிறார். அவர் ஏன் அதனைப் பொறுப்பேற்கிறார்?

நாம் லசந்தவைக் கொன்றவர்களைத்தான் சிறைக்குள் தள்ள இருக்கிறோம். லசந்த, எக்னெலி கொட, கீத் நொயார் ஆகியோரே எங்களுக்கு தேர்தலில் வாக்குகளைக் கொண்டுச் சேர்த்தவர்கள்.

நாம் தாஜுதீன் கொலையாளிகளைத் தூக்குமேடைக்கு அனுப்புவோம். அதேபோல் லசந்த கொலையாளிகளையும், தூக்குமேடை ஏற்றுவோம். பிரகீத் எக்னெலியகொடவைக் கடத்தியவர்களை மொத்தமாக அவர்கள், இராணுவத்தின் எந்த தரத்திலிருந்தாலும் தூக்குமேடை ஏற்றுவோம். அந்த பிள்ளைகள் 11 பேரைக் கொன்றவர்களையும் தூக்கிலிடுவோம்.

கீத் நொயார், பாலசூரிய, போத்தல ஜயந்த, உபாலி தென்னக்கோன், ஆகியோரைத் தாக்கியவர்களை நாம் சிறையிலடைப்போம். அன்று சிரச ஊடகநிறுவனம், சியத்த ஊடக நிறுவனத்திற்கு தீ வைத்தனர். இன்று அவ்வாறான நிலைமை இல்லை. – என்றார். (ஐ)

# முள்ளிக்குளம், முள்ளிவாய்க்கால், தோப்பூரில் காணிகளை விடுவிக்க அமைச்சரவை அனுமதி!

வடக்கு – கிழக்கு பிரதேசங்களில் போர் நடந்த காலப் பகுதியில் முப்படையினரால் பொறுப்பேற்கப்பட்ட தனியார் காணிகளை காணி உரிமையாளர்களுக்கு விடுவிப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடற்படையின், பொறுப்பிலிருந்த மன்னார், முள்ளிக்குளத்தில் அமைந்துள்ள 23 ஏக்கரும், முல்லைத்தீவு, முள்ளிவாய்க்காலில் அமைந்துள்ள 53 ஏக்கர் நிலப்பரப்பும் இலங்கை இராணுவத்தின் 224 ஆவது படைப் பிரிவு அமைக்கப்பட்டுள்ள திருகோணமலை தோப்பூரில் 3 ஏக்கர் காணியையும் உரிமையாளரிடம் விடுவிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அதேபோன்று இந்தப் பிரதேசங்களில் குடியமர்த்தப்படவுள்ள பொது மக்களுக்கு தமது வாழ்வாதாரத்தை நிலையான வகையில் முன்னெடுக்கக் கூடிய விதத்தில் யில் அடையாளம் காணப்பட்டுள்ள மூன்று குளங்களை சீர்செய்து, அந்தப் பிரதேசங்களில் அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்து, அவற்றை ஆரம்ப உரிமையாளரிடம் கையளிக்க வேண்டும்.

இதற்கமைவாக தற்பொழுது முப்படையினரால் பயன்படுத்தப்படும் காணியை விடுவிக்கக் கூடிய வகையில் இவற்றை புனரமைப்பதற்கும் அந்தப் பிரதேசங்களில் அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காகவும் தேவையான நிதி வழங்குவதற்காகவும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. மீள் குடியேற்றம், புனர்வாழ்வு, வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்துக் கலாசார அலுவல்கள் அமைச்சர் டி. எம். சுவாமிநாதன் சமர்ப்பித்த ஆவணத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ஐ)

# இலங்கை இராணுவத்தின் பாலியல் குற்றங்களையும் அம்பலப்படுத்துகிறது –மீ ரூ–




கொழும்பு, ஒக். 18

இறுதிக்கட்ட போரின்போது இராணுவத்திடம் சரணடைந்த பெண் விடுதலை புலி உறுப்பினர்கள் பலர் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டமையை உறுதிப்படுத்தும் இன்னொரு சான்றாக –மீ ரூ– (MeToo) பரப்புரையில் தகவல் ஒன்று வெளிவந்துள்ளது.

இந்தியா, இலங்கை உட்பட உலகம் முழுவதும் தற்போது பெரும் பூதாகரமான பிரச்சினையாக மீ ரூ– விவகாரம் காணப்படுகின்றது. குறிப்பாகப் பெண்கள் சமூகத்தில் எதிர்நோக்கிய பிரச்சினைகளை வெளிக்கொண்டுவரும் முகமாக –மீ ரூ– பதிவு பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

அதன் அடிப்படையில் கடந்த 2009 ஆம் ஆண்டு இறுதி யுத்தத்தின்போது சரணடைந்த பாடசாலை மாணவி ஒருவர் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார் எனப் புதிய சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், 2009 ஆம் ஆண்டு இறுதி யுத்தத்தில் விடுதலைப் புலிகள் வலுக்கட்டாய ஆள்சேர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். இவ்வாறு விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைக்கப்பட்டிருந்த ஏ. உஜாலினி என்ற பாடசாலை மாணவி, யுத்தம் நிறைவடைந்த இறுதித் தருணங்களில் பொதுமக்களுடன் சேர்ந்து இராணுவத்தினரிடம் சரணடைந்திருந்தார்.

இவ்வாறு சரணடைந்த மாணவி அன்று பாதுகாப்புச் செயலராக இருந்த கோட்டபாயவின் உத்தரவின் பேரில் 58 ஆவது பிரிவினரால் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார் என டுவிட்டரில் அம்சவள்ளி என்ற பெண் ஒருவர் – மீ ரூ – பரப்புரையில் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே இராணுவத்தினர் மீது பல குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ள நிலையில், மேலும் நெருக்கடி கொடுக்கும் வகையில், இந்தப் புதிய சர்ச்சை தற்போது சமூக வலைத்தளங்களில் வைரலாகப் பரவ ஆரம்பித்திருக்கின்றது.

எனவே, இதுவரை பெண்களுக்கு எதிரான பாலியல் தொந்தரவுகளை வெளிப்படுத்த பயன்படுத்தப்பட்டு வந்த – மீ ரூ – பரப்புரையில் இலங்கைப் படையினரால் பாதிக்கப்பட்டு பல்வேறு நாடுகளிலும் வாழ்ந்து வரும் ஆயிரக்கணக்கானவர்கள் தங்களுக்கு ஏற்பட்ட அவலங்களை வெளிப்படுத்துவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ)

# அரசியல் கைதிகளுக்கு மன்னிப்பு; தீவிரமாக ஆராய்கின்றதாம் அரசு

கொழும்பு, ஒக். 18

அரசியல் கைதிகளில் யாருக்குப் பொதுமன்னிப்பளிப்பது மற்றும் விடுதலையளிப்பது என்பது குறித்து அரசு தற்போது கலந்தாலோசித்துவருவதாக அமைச்சரவை இணைப் பேச்சாளர் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின்போது, தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பில் அரசின் தற்போதைய நிலைப்பாடு குறித்து ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் –

கடந்த வாரம் தமிழ் அரசியல் கைதிகள் குறித்து நான் பிரதமருடன் கலந்துரையாடினேன். தற்போதுள்ள நூற்றுக் கணக்கானோருக்கும் சட்ட ரீதியாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அத்துடன் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளவர்களில் எத்தனை பேரை விடுவிக்கலாம் என்றும் நாம் கலந்துரையாடினோம். இதில் கதிர்காமரைக் கொலை செய்தோரும் உள்ளனர் எனவும், அவர்களை விடுதலை செய்வது சாத்தியமில்லை எனவும் பிரதமர் குறிப்பிட்டார்.

அத்துடன் மிகப் பாரதூரமற்ற வழக்குகளும் உள்ளன. ஆகவே அவ்வாறுள்ள அனைவரது விடயங்களும் தீர்க்கப்பட்டுள்ளமையுடன் மேலும் 102 பேரது வழக்குகள் தொடர்பிலேயே தீர்மானிக்கப்படவுள்ளன. அவை தொடர்பில் 'பி' அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. யாருக்கு பொது மன்னிப்பளிப்பது, யாருக்கு தண்டனையளிப்பது என்பது குறித்தே தற்போது கலந்துரையாடி வருகின்றோம். – என்றார். (ஐ)

# அரச வங்கிகளின் பணிப்பாளர் சபைகளை கலைக்க தீர்மானம்

கொழும்பு, ஒக். 18

இலங்கை வங்கி, மக்கள் வங்கி, முதலீட்டுச் சபை ஆகியவற்றின் பணிப்பாளர் சபைகளைக் கலைக்க ஜனாதிபதி தீர்மானித்துள்ளார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தத் தீர்மானம் நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வருமென ஜனாதிபதி ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.10.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.